உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்




விருப்ப சந்தா
செலுத்த
ஸ்கேன் செய்யவும்

# அகிலம் போற்றும் ஆயுதபூஜை, விஜயதசமி சிறப்பிதழ்



ஆயுதபூஜை, விஜயதசமி நல்வாழ்த்துக்கள்
உலக பிரசித்தி பெற்ற மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் பேரருளால் தரம் எங்களுக்கு இறைவன் கொடுத்த வரம்!
தரத்தில் உயர்ந்தது! ருசியில் சிறந்தது! எண்ணெய் குடிக்காத அப்பளம் உண்ண தூண்டும் உன்னத சுவை!
ஸ்ரீராம் அப்பளம் & புட் பஜார்
SRI RAM APPALAM
Special Quality
SRI RAM APPALAM
Special Quality
UJALA APPALAM
Export Quality
SRI BALAJI APPALAM
எங்களிடம் தரமான அப்பளம், அப்பளப்பூ, மிளகு அப்பளம், சோவி அப்பளம், கல்யாண அப்பளம், மோதிர அப்பளம், பாய் அப்பளம், மசாலா அப்பளம், சீரக அப்பளம், அரிசி அப்பளம், தக்காளி வடகம், வெங்காய வடகம், சோற்றுக் கூழ் வடகம், ஜவ்வரிசி வடகம், கலர் வடகம் வகைகள்
ஸ்ரீராம் மஞ்சள் தூள், அரிசி மாவு, புட்டு மாவு, முறுக்கு மாவு, பெருங்காயம், பருப்பு வகைகள், மக்ருன் வகைகள், மோர் வத்தல், சுண்ட வத்தல் மற்றும் ஊறுகாய் வகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்
(ஸ்ரீராம் அப்பளம் எண்ணெய் குடிக்காத அப்பளம்)
HACCP CERTIFIED
ISO 9001:2015 CERTIFIED COMPANY
ASCB(E) Accrediting Certifying Bodies
தரம்! இறைவன் எங்களுக்கு அளித்த வரம்
Email Id: sriram.rajkumar1989@gmail.com / Web:www.sriramappalam.com
தயாரிப்பு கூடம்: 4/15A அனுப்பானடி சாலை, சிந்தாமணி, மதுரை- 625009
விற்பனையகம்: 51, அம்மன் சன்னதி, மதுரை - 625 001.
தொடர்புக்கு: 98432 60908, 9787932299, 95004 95248, 84388 70908

# உண்மைக்கு நியாயமும் பொய்க்கு தண்டனை தரும் காணிப்பாக்கம் விநாயகர்



ஒவ்வொரு கோவிலுக்கும் பொதுவாக ஒரு அதிசயம் இருக்கும். அவை கடவுளின் சக்தியால் நடக்கிறது என்பது நமது நம்பிக்கை.

500 ஆண்டுகள் மிக பழமை வாய்ந்த இந்த ஸ்ரீவரசித்தி விநாயகர் கோவில் ஆந்திரமாநிலம் சித்தூர் மாவட்டம் காணிப்பாக்கத்தில் எழில்மிகு அழகோடு உள்ளது. இங்கு, இந்த அதிசயஸ்ரீவரசித்தி விநாயகர் சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கிறார். வரசித்தி விநாயகர் சுயம்புவாக தோன்றிய கிணறு இப்போதும் உள்ளது.

இக்கிணற்றில் இருந்து எடுக்கப்படும் தண்ணீர் தான் இன்றைக்கும் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

### விநாயகரின் மகிமை!

ஆந்திராவின் சித்தூருக்கு அருகில் உள்ள காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் கோயிலில் பிரசாதம் ஒரு ஸ்பூன் தண்ணீர்! அதுவும் கிணற்று நீர்!

அந்த ஒரு உத்தரணி தண்ணீரைப் பெற்றுக் கொள்ளத்தான் அங்கே கூட்டம் அலை மோது கிறது. அதனைப் பருகினால் ஊனம் தீரும் என்றும் நோய்கள் எல்லாம் நீங்கும் என் பதும் பக்தர்களின் நம்பிக்கை.

காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் தோன் றியதே அந்தக் கிணற்றில்தான்! இன்றும் அதே கிணற்றின் மேல்தான் அவர் காட்சி தருகிறார். அது மட்டுமல்ல, இந்தக் காணிப்பாக்கம் விநாயகரைச் சுற்றி கிணற்று நீர் எப்போதும் ஊறிக்கொண்டேயிருக்கிறது.

நீளத் தும்பிக்கை, பெரிய காது, சிறிய கண் கள் என்றெல்லாமும் கிடையாது. கிணற்றில் எப்படித் தானாக, சுயம்புவாகத் தோன்றினாரோ, அதேபோல, எந்த மாறுதலும் இல்லாமல் இயற்கை யாகவே இருக்கிறார் பிள்ளையார். ஆனால் அவரது சக்தி உலகம் முழுவதும் பரவி நிற்கிறது!

பக்தர்கள் இவரை பயபக்தியுடன் வணங்கு கிறார்கள். காரணம், காணிப்பாக்கம் விநாயகர், `நல்லவருக்கு நல்லவர், கெட்டவருக்குக் கெட்டவர்' என்று தெலுங்குப் படம் போல் பஞ்ச் டயலாக் கெல்லாம் சொல்கிறார்கள்.

### 90 நாட்களில் தண்டனை

யாராவது, ஏதாவது விஷயத்தில் பொய் சொன்னால், அவரைத் தரதரவென இங்கே இழுத்து வந்து விடுகிறார்கள். விநாயகர் முன் சத்தியம் செய்யச் சொல்கிறார்கள்.

`காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் சாட்சியாக நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லை' என்று கூறினால், அதனை சத்தியப் பிரமாணமாக இன்றும் ஆந்திர கிராமப் பஞ்சாயத்துகளில் ஏற்றுக் கொள்கிறார்கள். இந்த விநாயகர் முன் யாராவது பொய் சொன்னால் 90 நாட்களுக்குள்ளேயே கடுமையாக தண்டிக்கப்படுவார் என்பதால்தான்!

உண்மை மட்டுமல்ல, ஊனமுற்றவர்களையும் இந்த விநாயகருக்கு மிகவும் பிடிக்கும். அவர்களின் குறைகளையெல்லாம் தீர்த்து வைப்பதில் இவருக்கு தீராத இஷ்டம்.

இந்த விநாயகர் முதலில் காட்சி தந்ததே ஊனமுற்ற மூன்று சகோதரர்களுக்குத்தான். ஊர்ப் பெயர் தோன்றியதும் அதனால்தான்! என கூறப்படுகிறது.

காணி நிலத்தில் தோன்றியதால், காணிப் பாக்கம் விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது. பக்தர்கள், தேங்காய் உடைத்தபோது பரவிய இளநீர், ஒரு காணிப் பரப்பளவு பரவியதால் `காணிப்பாக்கம்' என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள். (பாரகம் என்றால் நீர் பரவுதல் என்று தெலுங்கில் அர்த்தம். பாரகம் என்பதே பாக்கம் என்றானது!)

மிகவும் சிறியதாக இருந்த கோயிலை 11ம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழன், பெரிதாகக் கட்டித் திருப்பணி செய்தான். 1336ல் விஜயநகர மன்னர்களும் இங்கே சிறப்பு வழிபாடு செய்ததாக வரலாறு கூறுகிறது.

அலங்காரமில்லாத வெண்மை நிற ராஜ கோபுரத்தை அடுத்து உள்ளே சென்றால், அலங்காரமில்லாமல்,சுயம்புவாகக் காட்சி தரும் காணிப்பாக்கம் வரசித்தி விநாயகரைக் காணலாம். அவரைச் சுற்றி ஈரம் கசிந்து கொண்டிருப்பதையும் பார்க்கலாம்.

கொல்லபல்லி கிராமத்தை சேர்ந்த பெஜவாடா சித்தைய்யா என்பவர் ஒரு வெள்ளி கவசம் சுவாமிக்கு வழங்கினார். ஆனால் தொடர்ந்து விநாயகர் சிலை வளர்ந்து கொண்டு வருவதால் வெள்ளி கவசம் விநாயகர் பொருந்த வில்லையாம்.

# நவராத்திரி 9 நாள் 9 வடிவம்

சிவனுக்கு சிவராத்திரியைப் போன்று அம்ம னுக்கு நவராத்திரி என்பது உகந்த விஷேச தினமாக போற்றப்படுகிறது. இந்த நவராத்திரி நான்கு வகை யாக உள்ளது.

ஆடி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத்திரி **வாராஹி நவராத்திரி** என அழைக்கப்படும்.

புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன் பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத் திரி **சாரதா நவராத்திரி** என அழைக்கப்படும்.

தை மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத்திரி **சியாமளா நவராத்திரி** என அழைக்கப்படும்.

பங்குனி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன் பது நாட்கள் கொண் டாடப்படும் நவராத்திரி **வசந்த நவராத்திரி** என அழைக்கப்படும்.

## 9 நாள்களும் வழிபடவேண்டிய வடிவங்களும், பலன்களும்

| நாள் | பெயர் | பயன் |
|---|---|---|
| 1 | குமாரி | தொல்லை நீங்கும் |
| 2 | திருமூர்த்தி | தனதான்ய வளம் |
| 3 | கல்யாணி | பகை ஒழித்தல் |
| 4 | ரோகிணி | கல்வி வளர்ச்சி |
| 5 | காளிகா | துன்பம் நீங்குதல் |
| 6 | சண்டிகா | செல்வ வளர்ச்சி |
| 7 | ஸாம்பவி | நலம் விரும்பி |
| 8 | துர்க்கா | பயம் நீக்குதல் |
| 9 | ஸீபத்ரா | உண்டாகுதல் |

நவராத்திரியின் 9 தினங்களும், கடைசி தினமான வெற்றியை குறிக்கும் 10ம் நாள் வரை 10 தினங்களுக்கு 10 வடிவங்களின் அம்பாளை வணங்கவேண்டும். மேற்கண்ட 10 தினங்களும், 10 வடிவங்களும், அந்த வடிவங்களில் வழிபட்டால் நீங்கும் பிரச்சனைகளைப்பற்றியும் பார்ப் போம்.



நவராத்திரி பண்டிகையின் முதல் நாள் மது கடைபர் அழிவுக்கு காரணமான தேவியை குமாரி வடிவமாக வழிபட வேண்டும்.

இரண்டாம் நாள் மகிஷாசுரனின் சேனை களை வதம் செய்ய புறப்பட்ட ராஜராஜேஸ்வரியாக துர்க்கையின் வடிவத்தை அலங்கரித்துப் பூஜிக்க வேண்டும்.

மூன்றாம் நாள் மகிஷாசுரனை வதைத்த அம்பி கையை சூலத்துடன் மகிஷன் தலை மீது நிற்கும் கோலத்தில் வழிபட வேண்டும்.

நான்காம் நாள் அம்பிகையின் வெற்றித் திருக்கோலமாக வழி பட வேண்டும்.

ஐந்தாம் நாள் அம்பிகை சும்பன் என்ற அசுரனின் தூதன் வந்து பேசுவதை கேட்கும் கோலத்தில் பூஜிக்க வேண்டும்.

ஆறாம் நாள் அன்று சர்ப்ப ராஜா ஆசனத்தில் ஸ்ரீ சண்டிகா தேவி அமர்ந்திருக்கும் கோலம் பூஜைக்குரியதாகும்.

ஏழாம் நாளில் சண்ட முண்டர்களை வதைத்த பின் பொன் பீடத்தில் அம்பிகை அமர்ந்து வீணை வாசிக்கும் கோலத்தில் பூஜைகள் செய்யப்பட வேண்டும்.

எட்டாம் நாளில் ரக்த பீஜன் வதமான பின் கருணை நிறைந்த தோற்றத்துடன் உள்ள அம்பி கையை பூஜிக்க வேண்டும்.

ஒன்பதாம் நாளில் வில், அம்பு, அங்குசம், சூலம் முதலியவைகளை தரித்த கோலத்தில் அம்பி கையை பூஜிக்க வேண்டும்.

பத்தாம் நாளன்று அம்பிகை லிங்கத்தைப் பூஜித்து சிவ சக்தி ஐக்கிய ரூபிணியாக விளங்குகிறாள்.

எனவே அந்த கோலத்தில் அம்பிகையை வழிபடுதல் வேண்டும். நவராத்திரியில் கன்னிகை பூஜை, சுவாஸினி பூஜை, மிகவும் முக்கியம். ஒவ்வொரு நாளும் 2 வயதுப் பெண் குழந்தை முதல் முறையே பத்து வயது பெண் வரை ஒவ் வொன்றாகவோ அல் லது முதல் நாள் ஒன்று இரண்டாம் நாள் இரண்டு என்ற முறையாகவோ குமாரி பூஜை செய்ய வேண்டும்.

ஆயுதபூஜை, விஜயதசமி நல்வாழ்த்துக்கள்



# ஸ்ரீ பேச்சி அம்மன்

## டிரான்ஸ் போர்ட் & டிரேடர்ஸ்
## சேம்பர் பிரிக்ஸ் & ரியல் எஸ்டேட்

எங்களிடம் உயர்தரமான
அளவில் பெரிய சேம்பர்
செங்கல் கிடைக்கும்
பொறியாளர்கள் பில்டிங்
ஒப்பந்ததாரர்கள் அணுகவும்





உரிமையாளர் **எம்.கந்தசாமி**
செல் 9843789337 9487059737



அலுவலக முகவரி

பிளாட் 1&2 செல்வபுரம் மெயின்ரோடு, குகன் பள்ளி
அருகில், தெப்பக்குளம், மதுரை-626009

சேம்பர் முகவரி

கிருங்கா கோட்டை முத்தனேந்தல் அருகில்
மதுரை-ராமேஸ்வரம் பை-பாஸ் ரோடு மானாமதுரை

aanmeegamalar.com

# திருப்பதி திருமலையும் பெருமாளின் சிறப்புகளும்



## திருப்பதியில் பெருமாளுக்கு சூட்டும் மாலையை யாருக்கும் தருவது இல்லை

திருமலை திருப்பதியில் இன்று வரை கடைபிடிக்கப்பட்டு வரும் நிகழ்வுகளில் பெருமாளுக்கு சார்த்தப்படும் மாலையை மீண்டும் பயன்படுத்த மாட்டார்கள்.

குறிப்பாக பெருமாள் சன்னதிக்கு உள்ளே சென்ற மாலை வெளியேவருவ தில்லை. திருமலைக்கு மேல் மலையப் பனைத் தவிர வேறு யாரும் மாலைஅணி யக் கூடாது என்றொரு மரபு உள்ளது.

இதனால் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கப் படும் மாலைகள் ஏதும் திரும்ப வெளியே வருவதில்லை. பெருமாளின் கரு வறைக்குப் பின்புறத்தின் வாயிலாக அவை வெளியேற்றப் படுகின்றன.

பெருமாளுக்கு சூட்டும் மாலை யாருக்கும் கொடுப்பதில்லை, ஆண்டாள் சூடிய மாலையை மட்டும் பெருமாள் இன்றுவரை ஏற்றுக் கொள்கிறார்.

இந்த மாலைக்கு கோதை தரும் மாலை என்று பெயர்.

புரட்டாசி பிரம்மோற்சவத்தின் போது திரு மலையப்பன் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடிக் களைந்த மாலையை அணிந்து கொள்வது ஒரு சிறப்பம்சமாகும்.

## திருப்பதியில் அணையா விளக்கு

அணையா விளக்குகள் திருமலையப்பனின் கருவறை யில் ஏற்றப்பட்டிருக்கும் எண்ணெய் விளக்குகள் என்றும் அணைவதே இல்லை. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அவை எரிந்துகொண்டே இருக்கின்றன.

## இரண்டு அவதாரத்தில் காட்சி தரும் பெருமாள்

நரசிம்மன், ராமன், கண்ணன் போன்ற தோற்றங் களோடு இறைவன் பூமிக்கு வருவதை விபவ அவதாரநிலை என்று சொல்வார்கள்.

ஸ்ரீரங்கநாதன், வரதராஜன், சாரங்கபாணி போன்ற திருக்கோலங்களில் இறைவன் கோயில்களில் எழுந்தருளி இருப்பதை அர்ச்சாவதார நிலை என்று சொல்வார்கள். ஆனால் திருமலை ஸ்ரீநிவாசன், முதலில் அங்கே அவதாரம் செய்தபோது விபவ அவதாரமாகத் தோன்றி, பத்மாவதியை மணம் புரிந்து, அதன் பின் அர்ச்சாவதார நிலைக்கு மாறிக் கோயில் கொண்டவர்.

விபவம், அர்ச்சை ஆகிய இரு நிலைகளும் இணைந்திருப் பது ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கே உண்டான தனிச்சிறப்பு.

## திருமலைக்கு அதிபதி யார்?

சுவாமி புஷ்கரிணிக் கரையில் உள்ள வராகப் பெருமாள் தான் திரு மலைக்கு அதிபதியான பெருமாள். அவரிடம் நூறு சதுரஅடி நிலம் கடனாகப் பெற்றுக் கொண்டு, ஆனந்த நிலைய விமானத்தின் கீழே கருவறையில் ஸ்ரீநிவாசன் கோயில் கொண்டிருக்கிறார்.

எனவே திருமலைக்குச் செல்லும் பக்தர்கள் முதலில் வராகப் பெரு மாளைத் தரிசித்துவிட்டு அதன்பின் மலையப்ப சுவாமியிடம் செல்ல வேண்டும் என்பது மரபு.

## மலையையே இறைவனாக வணங்கலாம்!

திருமலைக்கு சென்று இறைவனைதரிசிக்கும் அனை வருக்கும், திருமால் கர்ப்ப கிரகத்தில் மட் டுமே இருக்கிறார் என்று நினைக்க வேண்டாம்.

திருமலையின் ஏழு மலைகளுமே திருமாலின் வடிவ மாகப் போற்றப்படுவதால், ஏழுமலைகளை வணங்கி னாலே போதும், பெருமாளை தரிசித்த புண்ணியம் தன்னால் வந்து சேரும். ராமாநுஜர் திருமலைக்கு வந்த போது, பெருமாள் மலையாக இருப்பதால் மலைமீது ஏற முதலில் மறுத்து விட்டார். திருமலையப்பனைத் தரிசிக்க இயலாதவர்கள், ஏழு மலைகளைத் தரிசித்தாலே பாபங்களும் நீங்கி விடும்

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்று சேர் திருவேங்கட மாமலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே

– எனும் பாடலில் நம்மாழ்வார் பாடியுள்ளார்.

திருமலையில் மூன்று நாட்கள் விரதம் இருந்த மகான் சில காலம் முன் வாழ்ந்த அன்னயார்ய மகாதேசிகன் என்ற பெரிய வர், திருமலைக்குச் சென்ற போது மூன்று நாட்கள் உணவோ தண்ணீரோ உட்கொள்ளவில்லை.

காரணம் வினவிய போது, உணவோ தண்ணீரோ உட்கொண்டால், இப்புனித மலையில் சிறுநீரோ மலமோ கழிக்க நேரிடும். அந்தப் பாபத்தை நான் செய்ய மாட்டேன் என விடையளித்தார்.

# 9 நீங்கள் எந்த வகை பக்தியை இறைவனிடம் செலுத்துகிறீர்கள்?

பக்தி என்பது அவரவர் மனோபாவத்திற்கு ஏற்றதாக அமைகிறது. இப்படி பக்தியை ஒன்பது விதமாக வகைப்படுத்த முடியும்.

| | |
|---|---|
| சிரவணம்: | பகவானுடைய நாமங்களையும், அவனுடைய குணங்களையும் கேட்பது. |
| கீர்த்தனம்: | பகவானின் பெருமைகளைப் பேசுவது. |
| ஸ்மரணம்: | எப்பொழுதும் பகவானை நினைத்துக் கொண்டிருப்பது |
| பாதசேவனம்: | பகவான் கால்களில் விழுந்து வணங்குவது |
| வந்தனம்: | பகவானை வணங்குவது, அவனைப் போற்றுவது |
| அர்ச்சனம்: | பகவானுக்கு மலர், கனி களையும் கொடுத்து மகிழ்வது |
| தாஸ்யம்: | பகவானின் வேலைக்காரனாக நடந்து கொள்வது |
| ஸக்யம்: | பகவானிடம் நட்பு கொள்வது. |
| ஆத்ம நிவேதனம்: | பகவானுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்வது |

இராமாயணத்தில் இந்த ஒன்பது வகையான பக்திக்கும் சிலரை உதாரணமாகக் கூற முடியும். நாம் கூட இறைவன் மீது பக்தி செலுத்துவோம், ஆனால் நாம் எந்த வகை பக்தியை இறைவனிடம் செலுத்துகிறோம் என்பது நமக்கே தெரியாது, நமது பக்தி எந்த வகை என்பதை தெரிந்து கொள்ள இராமாயணத்தை படிக்கும் போது கீழ்காணும் ஒன்பது பேரின் பக்தி செயலை கண்டால் நாம் அந்த பக்தியைதான் இறைவனிடம் செலுத்துகிறோம் என்பதை எளிதாக புரிந்து கொள்ளலாம்.

**ச்ரவணபக்தி: அனுமார்** இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தவர். **கீர்த்தன பக்தி: வால்மீகி** இராமாயணம் இயற்றியவர். **ஸ்மரண பக்தி: சீதை** அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதை இந்த பத்து மாதம் இராமனையே நினைத்திருந்தாள். **பாத சேவன பக்தி: பரதன்** இராமனின் பாதுகையை இராம னாக நினைத்து வணங்கியவன். **வந்தன பக்தி: வீபீஷணன்** இராவணனின் தம்பியானவன், இராமனையே வணங்கி வந்தான். **அர்ச்சனபக்தி: சபரி** இராமனுக்கு நல்ல பழங்களைக்கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பழத்தையும் தானே கடித்துப்பார்த்து அளித்தவள். **தாஸ்ய பக்தி: இலட்சுமணன்** இராமனுட னேயே இருந்து அவரதிசொல்படி நடந்தவன். **ஸக்ய பக்தி: சுக்ரீவன்** இராமனுடன் நட்பு கொண்டவன். **ஆத்ம நிவேதனம்: ஜடாயு** இராவணனிடமிருந்து சீதையைக்காப்பாற்ற முயன்று தன் உயிரைக் கொடுத்தவர்.




# மீனாட்சி அம்மன்

## அற்புதத் தகவல்கள்



மதுரையில் அமைந்திருக்கும் மீனாட்சி அம்மன் கோவில் உலக புகழ்பெற்றது. தேவாரம் பாடல் பெற்ற தலம், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரால் பாடப் பெற்றது.

இங்கு கர்ப்பக்கிரகத்தில் அம்பாள் ஒரு கையில் கிளியை ஏந்தியபடி காட்சி தருகிறார். மீன் போன்ற கண்களை பெற்றவர் என்பதால் மீனாட்சி என்று பெயர் வந்தது. பக்தர் களை அருட்கண்ணால் நோக்கி அருள்பாலிக்கிறாள்.

மீனாட்சியம்மன் திருக்கோலத் தில் கிளிக்கு முக்கிய இடம் உண்டு. பக்தர்களின்கோரிக் கையை அம்பிகைக்கு நினை வூட்டும் வகையில், கிளிதிரும்ப திரும்ப சொல்லும் என்பது நம் பிக்கை.

இங்குள்ள மீனாட்சி அம்மன் சிலை மரகத கல்லால் ஆனது. எனவே மீனாட்சி அம்மன் பரகதவல்லி என்றும் அழைக்கப் படுகிறாள்.

சுயாமி சன்னதியில் இறைவன் சுந்தரேசுவரர் சிவலிங்க திருமேனி யாக அருள்பாலிக்கிறார். இது கடம்ப மரத்தடியில் தோன்றிய ஒரு சுயம்பு லிங்கம்.

சுவாமி சந்நிதி பிராகாரங்களில் 64 திருவிளையாடல் காட்சிகள், சிற்பங்களாக செதுக்கப்பட்டு உள் ளன. சுந்தரேசுவரர் சொக்கநாதர், சோமசுந்தார்" என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

மேருமலை, வெள்ளிமலை, திருக்கேதாரம்,வாரணாசி போன்ற தலங்களுடன் ஒப்பிடுகையில், இது பழம் பெரும் சிறப்புகளை உடையது. எனவே இதற்கு மூலலிங்கம் என்ற பெயரும் உண்டு.

இதுதவிர அங்கயற்கண்ணி, தடாதகை, கோமளவல்லி, பாண்டிய ராஜ குமாரி, மாணிக்கவல்லி, சுந்தர வல்லி 'என்ற பெயர்களும் அம்மனுக்கு உண்டு, ஈசனின் 64 திருவிளையாடல்களும் மதுரையில் நடந்ததாக திருகல்யாண வரலாறுகள் தெரிவிக்கின்றன. மண்டபம் போன்றவை 15 ஏக்கர் பரப்பளவு கொண்டது. கிழக்குமேற்காக 847 அடியும், தெற்குவடக்காக 792 அடிகள் உடையது. இங்கு 8 கோபுரங்கள் உள்ளன. மீனாட்சி அம்மன் கோவிலின் ஆடி வீதியில் நான்கு திசைகளிலும் 9 நிலை களை உடைய 4 கோபுரங்கள் உள்ளன.

இதில் கிழக்கு கோபுரம் கி.பி. 1216–1238 ஆண்டுளிலும், மேற்கு கோபுரம் கி.பி. 1323 ஆண்டிலும், தெற்கு கோபுரம் கி.பி. 1559 ஆண்டிலும் கட்டப் பட்டது.

கோவிலின் வடக்கு கோபுரம் கி.பி. 1564–1572 ஆண்டில் கட்டப் பட்டதாக வரலாறு கூறுகிறது. மீனாட்சி அம்மன் கோவிலில் தெற்கு கோபுரம் மிகவும் உயர மானது. இந்த கோபுரத்தின் உயரம் 160 அடியாகும்.

கோவிலின் தலமரம்: கடம்பம், புளிதநீர், பொற்றாமரை குளம். சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு உடைய இந்த குளத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்த படிகலிங்கம், இன்றும் மதுரை ஆதீனத்தில் வழிபாட்டில் உள்ளது.

தமிழர்களின் சிற்ப கலைக்கு எடுத்துக்காட் டாக கட்டிடக் கலை வடிவமைப்புடன் இருக்கும் மீனாட்சி அம்மன்கோவில், 3000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.

மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்தில் இருக்கும் அஷ்டசக்தி மண்டபம், மீளாட்சி நாயக்கர் மண்ட பம், முதலி மண்டபம், வாயுஞ்சல் மண்டபம், கம்பத்தடி மண்டபம், கிளிக் கூட்டு மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம், இங்குள்ள சிற்ப வேலைப் பாடுகள் ஒவ்வொரு மண்டபத்திலும் தனித் தன்மை வாய்ந்த அழகிய நுணுக்கங்களுடன் இருப்பது தனி சிறப்புவாய்ந்தது. அஷ்டசக்தி மண்டபம் இது மீனாட்சி அம்மன் சன்னதியின் முன்பகுதியை விளிக்கும் எட்டு சக்தி (அஷ்ட

சக்தி) மண்டபம்.

வாயிலில் விநாயகர், முருகள் உருவங்களுக்கு இடையே மீனாட்சி கல்யாணம் சுதை வடிவில் காட்சி அளிக்கிறது. மண்டபத்தில் உள்ள தூண்களில் 8 சக்தியின் வடிவங்கள் அழகுற வரையப்பட்டு உள்ளன.

கம்பத்தடி மண்டபம் இது சிவனின் பல்வேறு வடிவங்களை உடையது. இங்கு உள்ள மீனாட்சி திருக்கல்யாண சிற்பம் உலகப்புகழ்பெற்றது.

சுவாமி சன்னதி முன்பு உள்ள நந்தி மண்டபம் ஒரே கல்லால் ஆனது. அடுத்தபடியாக உள்ள மீனாட்சி நாயக்கர் மண்டபத்தை தாண்டி சென்றால், இத்தல இறைவி மீனாட்சி அம்மனின் சன்னதி.

ஆயிரங்கால் மண்டபம் இது கோவிலில் சுவாமி சன்னதியின் இடப்புறம் உள்ளது. இது கோவிலில் உள்ள இத மண்டபங்களைவிட மிகவும் பெரியது. ஆயிரங்கால் மண்டப வாயிலின் மேல் விதானத்தில் தமிழ் ஆண்டுகள் அறுபதை குறிக்கும் வகையில், சக்கரம் செதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர சிற்பங்கள் நிறைந்த 985 தூண்களை இங்கு பார்க்க முடியும். இந்த தூண்களை சேர்வைக்காரர் மண்டபம், எந்த கோணத்தில் நின்று பார்த்தாலும், ஒரே வரிசையில் மீனாட்சி அம்மன் கலையழகு மிகுந்த பகுதிகள், வியப்புக்கு உரியது. அமைந்திருக்கும் காட்சி

உயிரங்கால் மண்டபத்தில் இன்னிசை ஒலி எழுப்பும் 22 தூண்கள் உள்ளன. இது கோவில் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டு, இங்கு பல்வேறு காலத்திய சிற்பங்கள், ஓவியங்கள், பாதக்கலை முத்திரைகள், இசைத்தூண்கள் போன்ற பல்வேறு சிறப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



ஆயிரங்கால் மண்டபம் கோவிலின் புது மண்டபம் கோவிலின் கிழக்கு கோபுரத்துக்கு எதிரே, 124 சிற்பத் தூண்கள் அடங்கிய மண்டபம். இது தற்போது சிறு வணிக கடைகளாக மாற்றப்பட்டு விட்டது.

இசைத் தூண்கள் மீனாட்சியம்மன் கோவிலின் வடக்கு ஆடி வீதியில் கல்லில் இசைபாடும் 5 இசை தூண்களும், ஆயிரங்கால் மண்டபத்தில் 2 இசைத் தூண்களும் உள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோவிலை தாமரை மொட்டு போல் உருவகப்படுத்தினால் அதை சுற்றியுள்ள தெருக்கள் தாமரை இதழை போன்றது.

மீனாட்சியம்மன் கோவிலுக்குள் இருப்பது ஆடி வீதி. இதனை தாண்டி கோவிலுக்கு வெளியில் இருப்பது சித்திரை வீதி, சித்திரை வீதிக்கு அடுத்தபடியாக இருப்பது ஆவணி வீதி. அதனை தாண்டி வெளியே வந்தால் மாசி வீதி, அதையும் தாண்டி இருக்கும் தெருக்கள் வெளி வீதிகள் என்று அழைக்கப்படுகின்றன.

மீனாட்சி அம்மன் கோவிலின் தெருக்களுக்கு தமிழ் மாதங்களின் பெயர் வைக்கப்பட்டு இருப்பதற்கு ஒரு காரணம் உண்டு, புராண காலத்தில் மன்னர்கள் குறிப்பிட்ட மாதங்களில் நடக்கும் விழாக்களை, அந்த 'மாதங்களின் பெயர் உடைய தெருக்களில்தான் நடத்தி உள்ளனர்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் சிந்திரை திருவிழா, முடிசூட்டுவிழா, திக்விஜயம், திருக்கல்யாணம், தேரோட்டம், புட்டு திருவிழா ஆகியவை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.






aanmeegamalar.com


# பழனி முருகனின் தரிசனப் பலன்கள்

கலியுகத்தில், நாம் செய்த கர்மவினைகளை குறைக் கக் கூடிய மாபெரும்சக்தி முருகப் பெருமானுக்கு உள்ளது.

பழனி மலைக்கு சென்று முருகனை தரி சனம் செய்தால் நம்முடைய கர்மவினைகள் குறையும். கர்ம வினைகளால் ஏற்படும் நம்முடைய பிரச்சனைகள் தீர பழனி முருகனை எப்படி வழிபாடு, பூஜை செய்வது என்ற தேவ ரகசியம் தெரி யுமா?

வாழ்வில் தடை போட்டி பொறமை கஷ்டம் போன்ற பல பிரச்சனைகள் விலக ஆண்டிகோலத் தில் இருக்கும் பழனியாண்டவர் முரு கனை தரிசனம் செய்வதால் நன்மைகள் பல உண்டாகும்

பழனி முருகப்பெருமானை ஆண்டி கோலத்தில் இருக் கும்போது தரிசனம் செய்தால் நம்மை ஆண்டியாக ஆக்கி விடுவார் என்றும், ராஜ அலங் காரத்தில் இருக்கும் போதும் மட்டுமே தரிசனம் செய்தால் ராஜ வாழ்க்கை கிடைக்கும் என்றும் பலர் சொல்ல கேட் டிருப்பீர்கள்.



ஆனால் உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தீராத துயரத்தை அனுபவித்து வந்தால், அதிகப்படியான தடைகள் உங்களுடைய வாழ்க்கையில் இருந் தால் நீங்கள் பழனி முருகனை தண்டாயுதபாணி கோலத்தில் அதாவது ஆண்டி அலங்காரத்தில் தரிசிப்பது தான் சிறந்தது

முற்றும் துறந்த தவ நிலை, அதாவது அலங்காரம் இல்லாமல் ஆண்டிக் கோலத்தில்பார்க் கும்போது நமக்குள் ஒரு மெய் ஞானம் உண்டாகும் என்பதற்காக. பெரிய ஞானிகளெல்லாம் அந்தக்கோலத்தைக் காண்பதற்காகத்தான் துடிப்பார்கள்.

முற்றும் துறந்தவர்கள், குடும்பத்தில் பல நிலைகளைக் கடந்தவர்கள் இவர் களெல்லாம் அந்தக் கோலத்தை விரும்பிப் பார்ப்பார்கள்.

ஜோதிடப்படி பார்க்கும் போது செவ்வாய் கிரகம் முருக னுக்கு வருகிறார். அதிலும் இந்த பழனி முருகன் ஞான காரகனாக இருக்கிறார். மேலும், இந்தச் செவ்வாயுடன் குருவும் கலக்கிறார். வீரம், தைரியம் இதற்கெல்லாம் உரியது செவ்வாய்.

இந்த வீரமும், தைரியமும் இருந்ததால்தான் எல்லோரையும், எல்லா வற்றையும் உதறித் தள்ளி விட்டு அவர் இங்கு வந்து நிற்க முடிந்தது. ஆனால் நின்ற உடனேயே அங்கு குரு வந்து விடுகிறார். செவ் வாயாக வீராவேசத்துடன் கிளம்பி குருவாக நிற்கிறார்.

வழக்குகளெல்லாம் நடக்கிறது, தீராத நோய்களெல்லாம் இருக்கிறது போன்ற பிரச்சனைகளுக்கு அலங்காரம் இல்லாத முருகனை வணங்குவதே நன்று.

20 வருடமா வாதாடிக் கொண்டிருக்கிறேன். தீர்ப்பு தள்ளி தள்ளிப் போகிறது என்றால் அதற்கு அலங் காரம் இல்லாத ஆண்டிக் கோல முருகன் வழிகாட்டுவார்.

தீராத நோய், மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள், அவ்வளவுதான் என்ற நிலையில் அதற்கும் நீங்கள் முருகனின் ஆண்டி கோலத்தை தரிசிக்கலாம்.

மன குழப்பத்தால் அவதி அடைபவர்கள் ஆண்டிக் கோல முருகனை வழிபடச் சொல்லலாம். அவர்களின் மன நிலையில் மாற்றங்கள் ஏற்படுவதை கண்கூடாகப் பார்க் கலாம்.

பேச இயலாதவர்கள், குறைபாடு உள்ளவர்கள், மன எழுச்சி, மனஉளைச்சல் உள்ளவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தைப் பார்த்தால் ஒரு சாத்வீகம், சமத்துவம் அவர்கள் மனதிற்குள் பாயும் இது இக்கோவிலின் தேவ ரகசியமாகும்.

திங்கள் கிழமையில் காலைநேரத்தில் மலையேறி முருகப் பெருமானை ஆண்டி கோலத்தில் தரிசித்தால், வாழ்க்கையில் இருக்கக்கூடிய தடைகள் அனைத்தும் நிவர்த்தியாகி படிப் படியான முன்னேற்றம் மாற்றம் ஏற்படும்.


ஆயுதபூஜை விஜயதசமி வாழ்த்துக்கள்

மதுரை கலையகம்

கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.

V.சுந்தரவடிவேல்

Visit: www.maduraikalaiyagam.com

Cell: 98428 05939

27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1



# பஞ்சாமிருத வழிபாட்டின் தாத்பரியம்

பஞ்சாமிருதத்தில் கடவுளிடம் செல்லும் மர்ம செய்தி ஒன்று உள்ளது. கங்கை நீரில் சர்க்கரை கலந்து பஞ்சாமிர்த்த பால், தயிர், தேன், நெய் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

1. பால்: கன்று அருகில் இருக்கும் வரை பசு பால் கொடுப்பதில்லை. கன்றுக்குட்டி இறந்து விட்டால். அதை வடிவமைக்காமல் பால் கொடுப்பதில்லை. பால் என்பது வேகத்தின் அறிகுறி.
2. தேன்: துகள்களை நிரப்ப தேன் சேகரிக்கிறது. இது பேராசை யின் அடையாளமாக கருதப்படுகிறது.
3. தயிர்:அதன் விளைவு சூடாக உள்ளது. கோபத்தின் அறி குறி
4. நெய்: அகங்காரத்தின் அடையாளம், செழிப்புடன் வர விருக் கிறது
5. கங்கை நீர்: மோட்சத்தின் அடை யாளம். கங்கையின் நீர். வேகம், பேரா சை, கோபம், கர்வம் இவற்றை அமை திப்படுத்துகிறது.

## பிரசாதம்

பிரசாதம் என்ற சொல்லுக்கு தூய்மை, மகிழ்ச்சி, பேரின்பம், அமைதி என அர்த்தங்கள் சொல லப்படுகின்றன. இறை சிந்தனை, மன தூய்மையுடன் பூஜை செய்யும் போது இறைவனின் திருமுகத்தை காணும் போது மனதில் ஏற்படும் அமைதியே உண்மையான பிரசாதம் என வேதங்கள் சொல்கின்றன.


ஆயுதபூஜை, விஜயதசமி நல்வாழ்த்துக்கள்

அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை

M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்

A.T.T.லாட்ஜ் அகிலா காம்ப்ளக்ஸ்







அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்


L.சுரேஷ்


S.அண்ணாமலை

பைபாஸ்ரோடு, மானாமதுரை

மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்



செல்: 98424 68215 / 73737 68215

# குடும்பத்தில் ஒற்றுமையையும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பையும் தரும்

# பாரத்வாஜேஸ்வரர்

சிவபெருமானை மூலவராகக் கொண்டு உலகம் முழுவதும் கோயில்கள் இருக்கின்றன. குறிப்பாகக் கம்போடியா, நேபாளம், இலங்கை, எனப் பல நாடுகளைக் கூறலாம். இவற்றினை விடவும் பாரத கண்டம் என்றும் அழைக்கப்படுகின்ற இந்தியாவில் அநேக சிவாலயங்கள் உள்ளன. அவை எண்ணிக்கை அடிப்படையில் முப்பீட ஸ்தலங்கள், பஞ்ச பூதத் தலங்கள், பஞ்ச கேதார தலங்கள், பஞ்ச தாண்டவ தலங்கள், பஞ்ச மன்ற தலங்கள், பஞ்ச பீட தலங்கள், பஞ்ச குரோச தலங்கள், பஞ்ச ஆசன ஸ்தலங்கள், பஞ்ச லிங்க ஸ்தலங்கள், ஆறு ஆதார தலங்கள், சப்த விடங்க தலங்கள், சப்த கரை சிவ தலங்கள், சப்த கைலாய தலங்கள், அட்டவீரட்டான தலங்கள், நவலிங்கபுரம், நவ கைலாயங்கள், நவ சமுத்திர ஸ்தலங்கள், தச வீராட்டன தலங்கள் எனவும், சைவ அடியார்களால் பாடல் பெற்றதைக் கொண்டு தேவாரத் திருத்தலங்கள், திருவாசகத் திருத்தலங்கள், தேவார வைப்புத் தலங்கள், திருச்சிற்றம்பலக் கோவையார் திருத்தலங்கள், திருவிசைப் பாத் திருத்தலங்கள் எனவும், வன விசேச தலங்கள், முக்தி தரவல்ல சிவத்தலங்கள், சோதிர்லிங்க தலங்கள், ஆதி கைலாய தலங்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

இத்தலங்களில் உமையம்மை, பிரம்மா, திருமால், இந்திரன், சப்தகன்னியர்கள், நவகிரகங் கள், தேவலோக மங்கைகள், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் எனப் பலர் சிவபெருமானை வழிபட்டுள்ளனர். வழிபட்டவர்களின் வேண்டு தல்களால் சிலதலங்கள் வழிபட்டோரின் சிறப்பு தலமாகவும் அறியப்படுகின்றன.

இதன் வரிசையில் சென்னை, கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு சொர்ணாம்பிகை சமேத திருவாலீஸ்வரர் என வழங்கப்படும் பரத்வாஜேஸ்வரர் திருக்கோயில் நமது தொண்டை நாட்டிலுள்ள 24 கோட்டங்களுள், "தொண்டை நாடு சான்றோர் உடைத்து" எனப் போற்றப்படும் நாலாறு கோட்டங்களுள் புலியூர் கோட்டம் இரண்டாவது கோட்டமாக உள்ளது. 24 கோட்டங்களுக்கும் தலைநகர் குன்றத்தூர் கோட்டமாகும். இச்சிறப்புப் பெற்ற புலியூர் கோட்டத்தில் திரேதா யுகத்தில் (இராமாயண காலத்தில்) வாழ்ந்த வானர அரசன் வாலி, ஏற்றம் நிறைந்த பரத்வாஜ மகரிஷி, இராமபிரான், நள சக்கரவர்த்தி மற்றும் ஊர்வசி (அப்சரஸ்) ஆகியோர் இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை வழிபட்டு பெரும்பேறு பெற்றுள்ளனர்.

பெரிய புராணம் இயற்றிய திருத்தொண்டர் சேக்கிழார் சுவாமிகள் புராணத்தை அருளிச் செய்த உமாபதி சிவாச்சாரியார் புலியூர் கோட்டத்தின் சிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

...தொண்டை நாட்டுள்


நாலாறு தோட்டத்துப் புலியூர்க் கோட்ட
நன்றிபுனை குன்றைவா நாட்டுமிக்க
சேலாறு கின்னவயற் குன்றத்தூரில்
சேக்கிழர் திருமரபு சிறந்தநன்றே

– என்று சிறப்பாகக் கூறியுள்ளார்.

ஸ்ரீ திருவாலீஸ்வரர், ஸ்ரீ பரத்வாஜேஸ்வரர் ஸ்ரீ இராமனாதேஸ்வரர் ஆகிய பெயர்களால் இறைவன் தொன்று தொட்டு வழங்கப்படுகிறார்.

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுச் செய்தியின்படி, இத்தலம் "திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ விஜயகண்ட சோழரால் 29ஆவது ஆண்டு கட்டப்பட்ட ஜயங்கொண்ட சோழ மண்டலத்தின் புலியூர் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டுப் புலியூர் திருக்கோயில்" என இத் தலத்தின் பின்புறம் உள்ள கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ விஜயகண்ட சோழர் (29வது பட்டம்) அந்தி (காலை) சந்தி (மாலை) ஆகிய இரண்டு வேளைகளிலும் விளக்கேற்றுவதற்காக 1,000 (ஆயிரம்) ஆடுகளையும், 1,000 (ஆயிரம்) பசுக்களையும் இத்திருத்தலத்து இறைவனுக்கு தானமாகத்







தந்துள்ளார். சுவாமி சன்னதியில் மேற்கு நோக்கி உபபீடம் அதிஷ்டான வர்க்கத்தில் ஜெகதீவரியில் பொறிக்கப் பட்டுள்ளது.

தொல்லியல் துறையின் மதிப்பீட்டின்படி இக்கல் வெட்டு 800 ஆண்டுகளுக்கு முந்தையது என உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

ஆந்திராவைச் சேர்ந்த மன்னன் ஸ்ரீ பெத்தப்ப சோழன் இத்திருத்தலத்திற்கு திருப்பணி செய் துள்ளதாகவும் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது.

மேலும் குஜராத்தைச் சேர்ந்த சிற்றரசனான பக்திமான் ஸ்ரீ இராமநாத பாண்டியாஜி சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இத்திருத் தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு சந்தான ப்ராப்தம் (குழந்தைப் பேறு வேண்டிச் செய்யப்படும் பிரார்த் தனை) செய்தார். இறைவனின் அனு கிரகத்தால் அவ்வரசனுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது, இதனால் மகிழ்ச்சி அடைந்த மன்னன் அக்குழந்தைக்கு இறைவனின் திரு நாமமாகிய சிவசங்கரன் (பாண்டியாஜி) என்னும் பெயரை வைத்தார்.

வளர்ந்து பெரியவனான சிவசங்கரன் பக்தியுடன் அவ்வூரிலேயே தங்கி மல்லிப் பூந்தோட் டங்கள், குளங்களை அமைத்து சிவபூஜை செய்து வந்தார். அந்த இடத்தில் குடிப்பிருப்புகளை அமைத்து, சிறப்பு வழிபாட்டிற்காகக் காஞ்சி மாநகரிலுள்ள ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானத்திலிருந்து திரு.சுப்புராயசிவாச்சாரியார் அவர்களை வரவழைத்து, தகுந்த ஏற்பாடுகளைச் செய்து தந்துள்ளார். அன்று முதல் இன்று வரை அந்த சிவாச்சாரியார் வம்சத்தினர்களே, சிவபூஜைகளை செய்து வருகின்றனர்.

இத்தலம் பல்லவர்காலத்து கட்டிடக்கலையின் சாயலில் கட்டப்பட்டுள்ளதாக செவிவழிச் செய்தி பண்டைய காலத் திலிருந்தே நிலவி வருகிறது.

ஒருமுறை கயிலாயத்தில் பரத்வாஜர் கருங் குருவியாக வலியன் உருவெடுத்து பூவுலகிலுள்ள பரத கண்டத்தில் தொண்டை நாட்டிலுள்ள சென்னையம்பதியில் பாடி / திருவலிதாயம் என்னும் ஊரில் இறைவனுக்குப் பூஜை செய்து ரிஷி உருவம் பெற்று இப்புலியூர் இறைவனையும் வழிபட்டதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

மேலும் இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை வாலி வழிபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. வாலியின் முன் வரும் எதிரிகளின் பலம் பாதியாக குறையும் எனும் சிறப்பு வரம் பெற்ற வாலியின் சிறப்பு, இத்தலத்து பெரு மாளை தொடர்ந்து வழிபடுபவர்களுக்கும் கிடைக்கும் என கூறப்படுகிறது.

இத்தலத்தில் சப்த கன்னிமார்களுக்கு என்று தனி யாக சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. கோ சாலை மற் றும் யாக சாலையும் தனித்தனியாக கோவிலுக்குள் அமைக்கப்பட்டுள்ளது மிகுந்த சிறப்பு.

ஆயிரம் விளக்கு தொகுதி எம்.எல்.ஏ., திரு.கு.க.செல்வம் மற்றும் ஆன்மீக அன்பர்களின் உதவியுடன், பழமையான கோவிலை புதுப்பித்து, மிகுந்த நேர்த்தியான சிற்பங்கள் மற்றும் திருக்கோவில் முழுவதும் மிகுந்த பொலிவுடன் மாற்றியமைத்து, கோபுரம் இன்றி இருந்த இத்திருத்தலத்தை, ஐந்து நிலை ராஜகோபுரம் கட்டி மிகச் சிறந்த சிற்பக் கோவிலாக மாற்றியுள்ளனர் இக்கோவிலை பராமரித்து வரும் சிவாச்சாரியார் வம்சத்தினர்.

பரபரப்பு மிகுந்த சென்னையில் சிற்பங்கள் நிறைந்த திருக்கோவிலாக திகழ்கிறது ஸ்ரீ திருவாலீஸ்வரர் திருக்கோவில். இத்தலத்தில் உள்ள நாகலிங்க மரம் பல நூறு வருடங்கள் பழமையானதாக செவிவழிச் செய்தி கள் கூறுகின்றன. ஆலமரத்தைப் போன்று மிகவும் பிரம் மாண்டமாக காட்சி தரும் இம்மரத்திற்கு தனியாக பீடம் அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இம்மரத்தின் வேர் இக்கோவிலின் எல்லை வரை பரந்து விரிந்துள்ளதாக கூறப்படுகிறது.

இத்திருத்தலத்தில் பிரதோஷ விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். மேலும் சித்திரை மாதத் திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டா டப்படும். ஒவ்வொரு சித்திரை மாதத்திலும் ஒன்பது நாட்கள் விழாக் கோலம் காணும் இத்திருத்தலத்தில் கடைசி நாளன்று திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.இத்தலத்தில் பரத்வாஜ முனிவர், வாலி சுதை சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளது. இராமபிரான் வழிபட்ட இராமநாதேஸ்வரருக்கு தனியாக சன்னதி உள்ளது.

எதிரிகளின் தொல்லை அதிகம் இருப்பவர்கள் வாலி வழிபட்ட சிவஸ்தலங்களுக்கு சென்று வழி பட்டால் எதிரிகளின் தொல்லை நீங்கும். கணவன் மனைவி இடையே பூசல்கள் இருந்து விலகி இருந்தால் இராமபிரான் வழிபட்ட சிவலிங்கங்களை வழிபட்டால் பிரிந்த தம்பதியினர் ஒன்று கூடுவர் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

அந்தவகையில் மேற்கண்ட இரண்டு பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கும் ஒரே தலமாக ஸ்ரீ திருவாலீஸ்வரர் திருத்தலம் விளங்குகிறது.

இத்திருத்தலம் அமைந்துள்ள புலியூர் கிராம தேவதை ஸ்ரீ முப்பாத்தம்மன் ஆவர். இத்தலத்திற்கு செல்ல, சென்னையிலிருந்து பல்வேறு பேருந்து வசதிகள் உள்ளன. சென்னை கோடம்பாக்கம் சென்று, அங்கு பவர் அவுஸ் பஸ் நிலையத்தில் இறங்கி இத்திருத்தலத்திற்கு செல்லலாம்.

இத்திருத்தலத்திற்கு ஸ்ரீ திருவாலீஸ்வரர் திருக்கோவில் மற்றும் பாரத்வாஜேஸ்வரர் திருக்கோவில் என்று இரண்டு பெயர் இருப்பதால் பெரும்பாலும் பரத்வாஜேஸ்வரர் திருக் கோவில், என்று விசாரித்தாலே பலருக்கு தெரியும்.

# கட்டிடக்கலைக்கு சான்றாக விளங்கும் சேலம் தாரமங்கலம் கைலாசநாதர் கோயில்

உலகத்திலேயே மிகச்சிறிய உயிரினமான எறும்புகள் நுழைவதற்காக துளைகளை விட்டு செதுக்கிய சிலை இந்த கோயிலில் மட்டும்தான் உள்ளது.

தொன்று தொட்டு விளங்கிவரும் தமிழ் பாரம்பரியத்தில் கட்டிடக்கலைக்குப் புகழ்பெற்றவர்கள் தமிழர்கள். தமிழர்களின் கட்டிடக்கலைக்கு மிகப்பெரிய சான்றாக தஞ்சை பெரிய கோயில் உள்ளது. அதைப்போலவே அரிய பொக்கிஷமாகத் திகழும் தாரமங்கலம் கயிலாசநாதர் ஆலயம் உள்ளது. தாரமங்கலம் சேலத்தில் இருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ளது.

மேற்கு பார்த்தபடி அமைந்த சிவன் கோயில் இது, இந்த பழைமையான சிவன் கோயில் தமிழர்களின் சிற்பக் கலைகளுக்கு மேலும் ஒரு சான்று எனலாம். இந்த கோயிலில் மூலவர் கயிலாசநாதர், தாயார் கற்பகாம்பாள் அருள் பாலிக்கிறார்கள்.

இக்கோயிலிலுள்ள இறைவனை சந்திரனும், சூரியனும் வந்து தொழுது செல்வதாக கூறப்படுகிறது. இந்த ஊருக்கு தாரமங்கலம் என்று பெயர் வரக்காரணம், சிவபெருமானுக்கும், பார்வதிக்கும் இங்கு திருமணம் நடந்தது என்றும், திருமால் தாரை வார்த்துக் கொடுத்து மணவிழாவினை நடத்தியதால் 'தாரமங்கலம்' என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர்.

தல வரலாறு:

கிபி 12ம் நூற்றாண்டில் கெட்டி முதலியார் இங்கு ஆட்சி செய்து வந்தார். அப்போது பசுக்கள் தினந்தோறும் மேய்ச்சலுக்கு போகும்போது ஒரு பசு மட்டும் குறிப்பிட்ட புற்றினில் தினமும் பால் சுரக்கிறது என்று தகவல் வந்தவுடன் அவர் அந்த புற்றை தோண்டி பார்த்தபோது சிவலிங்கம் காணப்பட்டது. அதனால் அவர் அங்கேயே வழிபாடு செய்ததாகவும் பிறகு வந்த மன்னர்கள் அங்கு கோயில் எழுப்பியதாகவும் வரலாற்றில் கூறப்படுகிறது.

கோயிலின் சிறப்புகள்:

இக்கோயிலிலுள்ள இறைவனை சந்திரனும், சூரியனும் வந்து தொழுது செல்வதாகக் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் உத்தராயண, தட்சணயான புண்ணிய காலங்களில் மாலை வேளையில் சூரியனின் கதிர்களும், சந்திரன் ஒளியும் சிவலிங்கத்தின் மீது படுகின்றன.


அதாவது, சூரிய ஒளி மூலஸ்தான சிவலிங்க மூர்த்தி மேல் விழுவதை சூரிய பூஜை என்று கூறுவர். சூரியனுடைய கதிர்கள் ராஜகோபுர வாயிலின் வழியே வந்து, நந்தி மண்டபத்தின் ஊடே புகுந்து, பின் மூன்று உள்வாயிலையும் கடந்து சிவலிங்கத்தின் மேல் படுவது அபூர்வமாக கருதப்படுகிறது.

சந்திரனுக்கும், சூரியனுக்கும் தாரகாபதி, தாரகன் என்ற பெயர்கள் இருப்பதால் தாரமங்கலம் என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவார்கள். கோயிலில் உள்பிரகார தூண்கள் எல்லாவற்றிலும் அற்புதமான சிற்ப வேலைப்பாடு அமைந்த திருவுருவங்கள் காணப்படுகின்றன. கோயில் என்பது இறைவனின் இருப்பிடம் என்பதைத் தாண்டி மக்களின் 'பாதுகாப்பு அரண்' என்னும் கொள்கையில் இந்தக் கோயில் அமைந்துள்ளது.

எதிரி நாட்டு படை தாக்க வரும்போது பொன், பொருள், மக்களைப் பாதுகாக்கும் வீதம் இந்த கோயில் அமைக்கப்பட்டுள்ளது. ராஜகோபுரம் 90 அடி உயரம் கொண்டது. வாசலில் 20 அடி கொண்ட வேங்கை மரத்தினாலான கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கதவுகளிலும் 60 கூர்மையான உலோகக் குமிழ்கள் வீதம் மொத்தம் 120 கூரிய உலோகக் குமிழ்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யானை வைத்து கதவுகளை உடைக்கும் அந்த காலத்தில் யானை முட்டி மோதி உடைக்கும் போது குத்தி கிழித்து



விடும்படி நுணுக்கமாக இவை அமைக்கப்பட்டுள்ளன.

சிங்கமுகமும் மனித தலையும் கொண்ட யாழியின் வாயில் உள்ள கல் உருண்டையை நாம் எவ்வாறு வேண்டுமானாலும் உருட்டலாம் ஆனால் கல்லை வெளியே எடுக்க முடியாது. கோபுரத்தை அடுத்துள்ள சிவப்பு பவளக்கல் படிகளில் 5 நிமிடம் அமர்ந்தாலே போதும் நம் உடலில் உள்ள வெப்பம் தணிந்து விடும். இந்த சிறப்புகள் தமிழ்நாட்டில் எங்கேயும் கிடையாது.



இந்த கோயிலின் கோபுரங்கள் ஒரு தேர் போலவும் யானைகள் குதிரைகள் கட்டி இழுப்பதுபோலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது சிறப்பு.

உலகத்திலேயே மிகச்சிறிய உயிரினமான எறும்புகள் நுழைவதற்காக துளைகளை விட்டு செதுக்கிய சிலை இந்த கோயிலில் மட்டும்தான் உள்ளது. எறும்புகள் நுழைந்து வரும் அளவுக்கு மட்டுமே துவாரம் உள்ள ஒரு மனிதனின் முகம் அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்ந்து கொண்டிருக்கும் எறும்புகள் அந்த சிற்பத்தின் காது வழியாக உள்ளே சென்று பின்னர் மூக்கு வழியாக வெளியே வரலாம். பிறகு தாடியில் உள்ள துவாரங்கள் வழியே உள்ளே நுழைந்து மறுபக்கம் சென்று மற்றொரு காது வழியாக வெளியே செல்லும் வகையில் நுண்ணிய துவாரங்களைக் கொண்டதாகக் கல்லில் சிலை செதுக்கியுள்ளனர்.

வளைந்த வாளுடனும், நீண்ட தாடி, தலைப்பாகையுடனும் படை எடுத்துவரும் மாலிக்கபூரின் வீரர்கள், அதை எதிர்த்து குறுவாள், கேடயத்துடன் எதிர்கொள்ளும் தமிழக மன்னர்களின் போர்க் காட்சிகள் பல இங்கு செதுக்கப்பட்டுள்ளன.

சோழ, பாண்டிய நாடுகளில் இருந்த செல்வங்களை எல்லாம் கொள்ளையிட்ட பின்னர் அவற்றைத் தன்னுடன் வந்திருந்த யானை மற்றும் ஒட்டகங்களின் மீது பொதி மூட்டையாய் ஏற்றிக் கொண்டு திரும்பிச் செல்லும் காட்சியும் சித்திரங்களாக உள்ளது.

தன்னுடைய தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் மாலிக்கபூரை இப்பகுதியில் வழிமறித்துத் தாக்குதல் நடத்த கெட்டி முதலியின் வீரர்கள் போர் வியூகம் அமைத்துள்ள காட்சி.

பின்னர், மதுரையில் கொள்ளையடித்த செல்வங்களை எல்லாம் யானை மற்றும் ஒட்டகங்களின் மீது ஏற்றிக் கொண்டு வந்த மாலிக்கபூரின் வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்கள் கொண்டு வந்த செல்வங்களை எல்லாம் கெட்டி முதலியின் வீரர்கள் பறித்துக்கொண்ட பிறகு, முதுகில் சுமையில்லாமல் யானை ஒன்று மாலிக்கபூரோடு செல்வது போன்ற ஒரு காட்சி போன்றவை ஆலயத்தின் சுற்றுச்சுவரில் செதுக்கப்பட்டுள்ளன.

அந்த செல்வங்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தைக் காட்டும் வகையில் சில குறிப்புகளை இந்த சித்திரங்களில் காட்டியுள்ளனர். வாழ்வில் கட்டாயம் காண வேண்டிய சிற்பக் களஞ்சியமாக இந்த கோயில் அமைந்துள்ளது.




# இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32அறப் பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதி யாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவபக்தர்களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந்துள்ளார்.

அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரண மாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ் சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்தித்தார். இந்தக் காலகதியைவெல்ல ஒரு வழியையும் கண்ட றிந்து வைத்தி ருந்தார்.



தன் குடிசையைப் புதுப்பிக்கும்போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்து விட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லா விட் டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புற வில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச் சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரி சியாகக் கீழ் விழும்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற் கினங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறு வேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச் சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங் கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண் ணங்களை அப்படியே மறையச் செய்தது. உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஓய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஒரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட் களை மட்டுமல்ல, கோள்களையும் மாற்றும் வல்லமை அவர் களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்டவர் களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குரு பெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது. பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடை பெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.


## இடைகாடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்

பௌர்ணமி அன்றும் காலை 10 மணிக்கு உலக மக்கள் யாவரும் நலமாக வாழ ஹோம பூஜை, அபிஷேகம் மற்றும் அன்னதானமும் சிறப்பாக நடைபெறும், பக்தர்கள் இதில் கலந்து கொண்டு பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

பௌர்ணமி விழாவில் நீங்களும் பங்கேற்க

**97515559851 /9751936853**

– இப்படிக்கு இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்



மகான்
இடைக்காடர்
சித்தர் பீடம்
மகாத்மா
கருணை இல்ல
வளாகம் ராயல்
சிட்டி அமராவதி
பாளையம்
திருப்பூர்.



**9952705871**

# கல்வியில் சிறக்கவைக்கும் கோயில்

சென்னைக்கு அருகில் மகேந்திர சிட்டிக்கு எதிரே இருக்கும் சாலையில் சென்றால் 3 கிலோமீட்டர் தூரம் வரை மட்டுமே நகரத்திற்கான சாயல் இருக்கும். அதன் பின்னர் சிறு குன்றுகளும், வயலும், குளமுமான பாதை. கொஞ்சம் தொலைவு பயணப்பட்டதும் செட்டிப்புண்ணியம் ஸ்ரீயோக ஹயக்ரீவர் ஆலயம் வந்துவிடும்.

வழக்கமாக கோயில்களுக்கு முன்பாக தேங்காய், பூ, பழங்கள் அதிகம் விற்கப்படும். இங்கோ அந்த கடைகளை விட நோட்டுப்புத்தகங்களும், பேனாக்களுமாக விற்கும் சிறு கடைகளை அதிகம் பார்க்கலாம்.

கல்விக்கு கடவுளான சரஸ்வதி தேவியே குருவாக வழிபடும் ஹயக்ரீவரை கல்வியும், ஞானமும் அறிவும், ஆற்றலும் சித்திக்க வழிபட வேண்டும் என்பதால் இத்தலம் உருவாக்கப்பட்டுள்ளது. யோக நிலையில் அமர்ந்த கோலத்துடன் நான்கு கரங்களுடன் சங்கு சக்கர தாரியாக இறைவன் காட்சிதருகிறார்.

அவர் முன்பாக நோட்டு பேனாவையோ, புதிய வகுப்பு பாடப் புத்தகங்களையோ தேர்வு நேரத்தில் ஹால் டிக்கெட்டுகளோ வைத்து வணங்கி பெற்றோரும் பிள்ளைகளும் ஆசி பெற்று செல்கிறார்கள். வகுப்பின் தொடக்கத்தில் செட்டிப்புண்ணியம் கோயிலுக்கு செல்வது பலருக்கும் அந்தக் கடவுளே தங்கள் பிள்ளைகளுக்கு துணையாக இருப்பது போன்ற தைரியத்தை தந்துவிடும்.

1848ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் கோயில் சிலைகள் கொள்ளை போவதை தடுக்க பல பிரயத்தனங்களை எடுக்க வேண்டி இருந்தது. அப்படி கடலூர் மாவட்டம் திருவந்திபுரத்தில் இருந்து தேவநாதபெருமாளும், யோக ஹயக்ரீவரும், அப்போது அடர்ந்த காடாக இருந்த செட்டிபுண்ணியம் கிராமத்திற்கு கொண்டு வரப்பட்டனர். அப்போதிருந்து இங்கேயே பிரத்யட்சமாக காட்சி அளிக்கிறார்.



கோயிலில் தென்படும் அழிஞ்சல்மரத்தில் படிக்கவும், திருமண தடைகள் நீங்கவும், வீடு கட்டவுமாக வேண்டுதல் வைத்து ஆடையின் ஈரிழைகளை கட்டி வைத்திருப்பதை காணலாம்.


ஆயுதபூஜை, விஜயதசமி நல்வாழ்த்துக்கள்

A.L.S.ராமையாநாடார் - சன்ஸ்

மரம், ஓடு, சிமிண்ட், உரம் வியாபாராம்

236, மெயின்ரோடு, மானாமதுரை

ஸ்ரீ அருணாட்சி அம்மன் பிரிக்ஸ்

உயர்தர சேம்பர் செங்கல் தயாரிப்பாளர்கள்

செல்: 99946 75130, 94431 68202, 98424 68202, 04574269905




aanmeegamalar.com

# வரம் தரும் குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில்









சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம். குறிச்சியில் வரம் தரும் ஸ்ரீ வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் உள்ள அம்மன் பக்தர்கள் கேட்கும் வரங்களை தருவதாலும்  துன்பங்கள் நீங்க பெறுவதால் வழிவிடு பெரியநாச்சி அம்மனை ஏராளமான பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

இங்கு நடைபெறும் சித்திரை பௌர்ணமி விழா சிறப்பு வாய்ந்தது ஆகும். அன்று பக்தர்கள் அக்கினி சட்டி, பூகரகம், அலகுகுத்தி பால்குடம் எடுத்து ஊர்வலம் வந்து வழிபடுவார்கள். இரவு வானவேடிக்கை வழிபாடு நடைபெறும்.

இக் கோவில் வளாகத்தில் காசியில் இருந்து பூஜித்து காசிவிஸ்வ நாதர், காசி நந்தி மற்றும் காசி துர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசியில்ல் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது.

பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு கங்கை தீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெருமானை தொட்டு வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை இக்கோவிலில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் கீழே காணும் எண்ணில் தொடர்பு கொண்டால், கங்கை நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் கூறப்படும், கங்கை நீர் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 9444159653.

மானாமதுரை தெ.புதுக்கோட்டை வழியாகசெல்லும் பரமக்குடி செல்லும் சாலையில் குறிச்சி ஸ்ரீ வழிவிடு பெரிய நாச்சிஅம்மன் கோவில் உள்ளது.

நற்பவி என்று சொல்வோம் நன்மைகள் பல செய்வோம்

## சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம்

# குறிச்சி ஸ்ரீ வழிவிடுபெரியநாச்சி ஸ்ரீ காசிவிஸ்வநாதர் திருக்கோவில்











**மாதந்தோறும்**
**பிரதோஷ பூஜை**
**பௌர்ணமி பூஜை**
**ஐப்பசி அன்னாபிஷேகம்**
**திருக்கார்த்திகை**
**தீப விழா**

காசிக்கு செல்ல முடியாதவர்கள் இங்கு வந்து வழிபட்டால் காசி சென்ற பலன் கிடைக்கும். கோவில் கும்பாபிஷேகத்திற்கு இலவசமாக கங்கை தீர்த்தம் வழங்கப்படுகிறது தமிழகத்திலேயே காசி சிவனுக்கு கங்கை தீர்த்தம் அபிஷேகம் செய்து பக்தர்கள் அனைவரும்தொட்டு வழிபடும் கோவிலாகும்.



இறைபணியில்

**S.P.தேவர்**

புபேஸ் ரியல் எஸ்டேட்

22, பனகல் பார்க், சென்னை17
செல்: 9444159653,
9444638782, 9443020577,
9176242221 9566183703
வீடு 04423751097



aanmeegamalar.com

# தானம் செய்வதின் சிறப்புகள்

தானம் செய்வது மிகச் சிறந்த விஷயமாகும். இருப்பவன் இல்லாதவனுக்கு கொடுக்கும் போது இறைவனாகவே மதிக்கப்படுகிறான். அவ்வாறு தானங்கள் கொடுப்பதால் கிடைக்கும் பலன்கள்...

- அரிசியை தானம் தர பாவங்கள் தொலையும்
- வெள்ளியை தானம் தர மனக்கவலை மறையும்
- தங்கம் தானம் தர தோஷம் விலகும்
- பழங்களைத் தானம் தர புத்தி, சித்தி கிட்டும்
- தயிர் தானம் தர இந்திரிய விருத்தியாகும்.
- நெய் தானம் தர நோயைப் போக்கும்
- பால் தானம் தர துக்கநிலை மாறும்
- தேன் தானம் தர பிள்ளைப்பேறு கிட்டும்
- நெல்லிக்கனி தானம் தர ஞானம் உண்டாகும்
- தேங்காய் தானம் தர நினைத்த காரியம் வெற்றி அடையும்.
- தீபங்களை தானம் தர கண்பார்வை தெளிவாகும்
- கோ(மாடு) தானம் தர ரிஷி, வேத, பிதிர்கடன் விலகும்
- பூமியை தானம் தர பிரம்மலோக தரிசனமும் ஈஸ்வரலோக தரிசனமும் கிட்டும்
- ஆடையை தானம் தர ஆயுள் விருத்தியாகும்
- அன்னத்தை தானம் தர தரித்திரமும் கடனும் தீரும்.

## கர்ம வினைகள் தீர தானங்களும் பலன்கள்

- அன்னதானம் செய்தால் பூர்வ ஜென்ம கர்மவினைகள் தீரும். பித்ருக்களின் ஆசிர்வாதம் கிடைக்கும்.
- ஆடைதானம் செய்தால் தகாத உறவுக் குற்றங்கள் நீங்கும். பெண்களின் கற்பிற்கு ரட்சையாக இருக்கும்.
- காலணி தானம் செய்தால் பெரியோர்களை நிந்தித்த பாவம் விலகும்.தீர்த்த யாத்திரை செய்த பலன் கிடைக்கும்.
- மாங்கல்ய சரடு தானம் செய்தால் காமக் குற்றங்கள் அகலும். தீர்க்க மாங்கல்ய பாக்யம் உண்டாகும் .
- குடை தானம் செய்தால் தவறான வழியில் சேர்த்த செல்வத்தினால் ஏற்பட்ட பாவம் விலகும். குழந்தைகளுக்கு சிறப்பான எதிர்காலம் உண்டாகும்.



- பாய் தானம் செய்வதால் பெற்றவர்களை பெரியவர்களை புறக்கணித்ததால் வந்த சாபங்கள் தீரும். கடும் நோய்களுக்கு நிவாரணம் கிட்டும் .அமைதியான மரணம் ஏற்படும்.
- பசு தானம் செய்தால் இல்லத்தின் தோஷங்கள் விலகும்.
- பலவித பூஜைகளின் பலன்கள் கிடைக்கும்.
- பழங்கள் தானம் செய்தால் பல ஜீவன்களை வதைத்த சாபம் தீரும். ஆயுள் விருத்தியாகும்.
- காய்கறிகள் தானம் செய்தால் பித்ரு சாபங்கள் விலகும். குழந்தைகளின் ஆரோக்யம் வளரும்.
- அரிசி தானம் செய்தால் பிறருக்கு ஒன்றுமே தராமல் தனித்து வாழ்ந்த சாபம் தீரும். வறுமை தீரும்.
- எண்ணெய் தானம் செய்தால் நாம் அறிந்தும் அறியாமலும் செய்த கர்ம வினைகள் அகலும்.கடன்கள் குறையும்.
- பூ தானம் செய்தால் அந்தஸ்து காரணமாக பிறரை அவமதித்ததால் ஏற்படும் தீவினைகள் நீங்கும்.
- குடும்ப வாழ்க்கை சுகமாகவும், சாந்தமாகவும் அமையும்.
- பொன் மாங்கல்யம் தானம் செய்தால் மாங்கல்ய தோஷங்கள் நீங்கும். திருமண தடங்கல்கள் நீங்கும்.
- நம்மால் முடிந்த தானங்கள் செய்தால் நமக்கு வளமான வாழ்வு அமைவதோடு, நம் சந்ததிக்கும் நல்ல வளமான நல்வாழ்வு அமையும்.



ஸ்ரீ மகா பெரியவா
பஞ்சகவ்ய பசுஞ்சான விளக்கு, சாம்பிராணி பத்தி, தூபம் ஜவ்வாது தூபம், தசாங்கம் தூபம் மற்றும் தெய்வீக மூலிகை சாம்பிராணி பொடி
பசுஞ்சாண விளக்கு நாட்டு பசுவின் சாணம், மூத்ரம், தயிர் மற்றும் நெய் சேர்த்து தயாரிக்கப்பட்டது
Contents: 10 Pcs
MRP: Rs.100/
மொத்தமாக கிடைக்கும், கோவில் நிர்வாகிகள், பூஜை பொருள்கள் விற்பனையாளர்கள் அணுகவும்
6382154167

# ஸ்ரீ காளஹஸ்தி கோவில்



ஆந்திரபிரதேசத்தில் உள்ள காளஹஸ்தி நகரத்தில் உள்ளது. தென்னிந்தியாவில் மிக பிரபலமான சிவன் கோவில்.

இந்த இடத்தில் தான் கண்ணப்ப நாயனார் தன் கண்களை எடுத்து சிவனுக்கு கொடுக்க முனைந்த இடமாக புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பதி கோவிலில் இருந்து 36 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது □□ரீகாளஹஸ்தி கோவில். இந்த கோவிலில் பஞ்சபூத ஸ்தலங்களுள் வாயுலிங்கத்திற்கு மிகவும் புகழ் பெற்ற தலமாக உள்ளது.

இந்த கோவிலுக்கு வேறு சில முக்கியத்துவமும் உண்டு. இதனை ராகு கேது ஸ்தலம் என்றும் தக்ஷின கைலாசம் என்றும் அழைக்கிறார்கள். இந்த கோவிலின் உட்புறம் ஐந்தாம் நூற்றாண்டிலும் வெளிப்புற கட்டமைப்பு 11 ஆம் நூற்றாண்டிலும் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது. இங்கு சிவன் வாயு ரூபத்தில் காளஹஸ்தீஸ்வரா என்ற பெயரில் வழிபடப்படுகிறார்.

வாயு தேவர் இங்கே சிவபெருமானை கற்பூர லிங்கமாக வழிபட்டுள்ளார் அவர் தவத்தில் மெச்சிய சிவபெருமான் வாயுவிற்கு அருளி இங்கே தரிசனம் தந்ததாகவும் அவர் கோரிய வரத்தின் பேரிலேயே இங்கே அவர் வாயுலிங்கமாக தங்கி தரிசனம் தருகிறார்.

இங்கே நூறு தூண் மண்டபம் விஜயநகர பேரரசான கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. இதன் மூலவர் சிவலிங்கம் வெள்ளை நிற கல்லால் ஆனது. இது பார்க்க யானையின் தந்தம் போன்ற வடிவில் இருந்தது. இந்த கோவிலை தென்னகத்தின் காசி என்றழைக்கிறார்கள். இந்த ஒரு கோவில் தான் சூரிய கிரகணம், மற்றும் சந்திர கிரகணம் ஆகிய நாட்களில் திறந்திருக்கும் அதிசயம் நிகழ்கிறது. ஜோதிட பரிகார ஸ்தலங்களுள் மிக முக்கியமானது இந்த கோவில். இந்து புராணங்களில் படி, காளஹஸ்தீஸ்வரரை பிரம்ம தேவர் நான்கு யுகத்திலும் வணங்கியுள்ளார். மஹாபாரதத்தின் அர்ஜூனரும் இங்கே சிவபெருமானை வழிபட்ட குறிப்புகள் உண்டு.

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், நக்கீரர், ஆகிய அனைவரும் இந்த கோவில் குறித்து பாடல் பாடியுள்ளனர். இங்கே நடைபெறும் சிவராத்திரி விழா 13 நாட்கள் நடக்கும் திருவிழா. இந்த நாட்களில் சிவபெருமனை தரிசிக்க இங்கே இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்றனர்.







மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

160 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன


23.10.2023 சிறப்பிதழ்




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V.நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# ஆயுதபூஜை விஜயதசமி சிறப்புகள்





- சோழர் காலத்தில் நவராத்திரி திருவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது.
- நவராத்திரி நாட்களில் பெண்கள் கன்யா பூஜை செய்வதால் சகல செல்வங்களையும் பெறலாம்.
- விஜயதசமி தினத்தன்று பெருமாள் கோவில்களில் வன்னி மரக்கிளையை வைத்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்து பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும்.
- நவராத்திரி பண்டிகையை முதன் முதலில் ராமர்தான் கொண்டாடியதாக புராணங் களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நவராத்திரி நாட்களில் இரவு 7 மணி முதல் 9.30 மணி வரை தேவி வழிபாடு செய்ய உகந்த நேரமாகும்.
- ஈசனம், அம்மையும் ஒன்று சேர்ந்து ஊஞ்சலில் ஆடுகின்ற தரிசனத்தை 9 நாட் களும் கண்டால் நவராத்திரி பூஜை செய்த பலன் கிடைக்கும்.
- நவராத்திரி நாளில் வரும் சப்தமி திதியன்று வழிபட்டால் ஸ்ரீஹயக்ரிவப் பெருமாளின் அருளைப் பெறலாம். அன்று ஸ்ரீலலிதாசகரஸ்ர நாமத்தையும் நவாக்சரி மந்திரத்தையும் ஓதுவது கூடுதல் பலன்களைத் தரும்.
- பிரம்ம நவராத்திரி, கிருஷ்ண நவராத்திரி, ரிஷி நவராத்திரி, தேவ நவராத்திரி, பஞ்ச கல்ப நவராத்திரி, பாக்ய நவராத்திரி, போக நவராத்திரி, தாத்பர்ய நவராத்திரி, சற்குரு நவராத்திரி, தேவதா நவராத்திரி என்று பல வகை நவராத்திரிகள் உள்ளன.
- பங்குனி மாதம் அமாவாசைக்குப் பிறகு பிரதமையில் தொடங்கும் லலிதா நவராத்திரி, மாசி மாதம் வரும் ராஜ மாதங்கிநவராத்திரி ஆடியில் வரும் மகாவராகி நவராத்திரி, புரட்டாசியில் வரும் சாரதா நவராத்திரி ஆகிய 4 நவராத்திரிகளையும் பெண்கள் கடைபிடித்தால் அம்பிகையின் அருளை பரிபூரணமாகப் பெறலாம்.
- அனைத்திலும் தேவியே உள்ளாள் என்பதை உலகுக்கு உணர்த்தவே நவராத்திரி நாட்களில் கொலு வைக்கப்படுகிறது.
- எல்லாரும் புரட்டாசி நவராத்திரியில் மட்டுமே கொலு வைக்கிறார்கள். ஆனால் 4 நவராத்திரி நாட்களிலும் கொலுவைத் தால்தான் அம்பிகை அருள் கிடைக்கும்.
- வீட்டில் கொலு வைத்தால், அம்பிகை அனைத்து அம்சமாக நம் வீட்டில் எழுந்தருளி விட்டாள் என்பது நம்பிக்கையாகும்.
- ஒரு நவராத்திரிக்கு கொலு வைத்தால் பிறகு வாழ்நாள் முழுவதும் நவராத்திரி நாட்களில் கொலு வைக்க வேண்டும் என்கிறார்கள்.
- நவராத்திரி பூஜையை அஸ்தம், சித்திரை அல்லது மூலம் நட்சத்திர நாட்களில் தொடங்குவது நல்லது. இந்த நாட்களில் வைதிருதி யோக நேரம் இருந்தால் மிகவும் நல்லது.
- விஜய தசமி தினத்தன்று ஸ்ரீஆயுர் தேவியை போற்றி வழிபட வேண்டும். இதுதான் நவராத்திரி பூஜையின் நிறைவான பூஜையாகும்.
- நவராத்திரி நாட்களில் பகலில் சிவ பூஜையும் இரவில் அம்பிகை பூஜையும்

செய்வதே சரியான வழிபாடாகும்.

- நவராத்திரி 9 நாட்களும் தினமும் பகலில் 1008 சிவ நாமாவளிகளை ஜெபித்து வழிபாட்டால் அளவிடற்கரிய பலன்கள் கிடைக்கும்.
- நவராத்திரி வழிபாட்டை தினமும் தொடங்கும் போது ஸ்யவன மகரிஷியையும் சுகன்யா தேவியையும் தியானித்தபடியே தினசரி பூஜையை தொடங்க வேண்டும்.
- நவராத்திரி நாட்களில் சுண்ணாம்பு மாவினால் கோலம் போடக்கூடாது. அரிசி மாவைப் பயன்படுத்திதான் கோலமிட வேண்டும். அவ்வாறு செய்வதால் குடும்ப ஒற்றுமையும், செல்வமும் வளரும். சுண்ணாம்பு மாவு பயன்படுத்தினாலோ, எதிர்மறையான விளைவுகளே உருவாகும்.
- ஒன்பது நாட்களிலும் தேவியாக பாவித்துத் துதிக்க, நமக்குச் சொந்தமல்லாத, பிறர் வீட்டுக் குழந்தையையே அழைத்து வந்து உபசரிக்க வேண்டும். நம் வீட்டு அல்லது நம் உறவினர்களின் குழந்தைகளையே தேர்ந்தெடுப்பது கூடாது.
- தினந்தோறும் நவராத்திரி பூஜையின் நிறை வாக, பலவிதமான மங்கலப் பொருட்களை (மஞ்சள், குங்குமம், வளையல்,ரிப்பன் போன்றவை) ஏழைகளுக்கு தானமாக அளிக்க வேண்டும்.
- தனித்து தானம் செய்வதை விட, சத்சங்க மாகப் பலரும் ஒன்று சேர்ந்து, மங்கலப் பொருட்களை மிகப் பெரிய அளவில் தானமாக அளிப்பதே சிறப்பானது.
- தான தர்மங்கள்தான் நவராத்திரி பூஜைகளை நிறைவு செய்ய உதவிகின்றன. ஆகவே நவராத்திரியில் தானமளிப்பதே மிகமிக முக்கியம்.
- கன்னிப் பெண்களுக்குப் புதிய ஆடை முதலியவை பரிசாக அளிக்கப்படவேண்டும் என்பது நவராத்திரி விழாவின் முக்கிய அம்சமாகும்.
- நவராத்திரி ஒன்பது நாளும் பூஜையைத் திருமகளே ஏற்றுக் கொள்கிறாள்.
- சரஸ்வதி பூஜை என்ன கிழமையானாலும் கடலை சுண்டல் எதுவும் செய்ய முடியாத வர்கள் பழங்கள் கொடுக்கலாம்.
- நவதானியச் சுண்டல் நவக்கிரக நாயகர் களைத் திருப்திப்படுத்தும். கோள்களால் வரக்கூடிய துன்பங் களைத் தடுக்கும்.
- ஷோடச லஷ்மி பூஜை நவராத்திரி வெள்ளிக் கிழமை யில் செய்தால் ஐஸ்வர்யம் பெருகும். இது கிரியா சக்தி வழிபாடு.
- நவராத்திரி காலத்தில் முடிந்தவரை பாரா யணம் செய்வது தேவிக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தரும்.
- அந்த நாளில் கொலுவுக்கு வரும் கன்னி யரின் நடையுடை, பாவனை, பேச்சு, பாட்டு, நடந்து கொள்ளும் விதம் இவற்றை முனிவர்கள் தீர்மானித்து தன் மகனுக்கோ, தன் உறவினர் மைந்தனுக்கோ இவள் ஏற்றவள் என்று தீர்மானிப்பர். பல திருமணங் கள் அப்படி முடிவாகி கார்த்திகை அல்லது தையில் நடந்திருக்கின்றன.
- நவராத்திரி விரதம் இருப்பவர்கள் தரையில் தான் படுத்து தூங்க வேண்டும். அம்பிகை சங்கீதப் பிரியை. எனவே நவராத்திரி நாட்களில் தினமும் ஏதாவது ஒரு பாட்டாவது பாட வேண்டும்.
- நவராத்திரி 9 நாட்களும் மகா சக்தியை ஐதீகப்படி வணங்கினால் முக்திப் பேறு உண்டாகும்.
- நவராத்திரி கோலத்தை செம்மண் கலந்து போட்டால் அம்பாள் மனமகிழ்ந்து வருவார்.
- நவராத்திரி 9 நாட்களும் வாசலில் மாவிலை கட்டி பூஜை செய்தால் ஐஸ்வர்யம் உண்டாகும்.
- கொலு வைத்திருப் பவர்கள் அதன் முன் நவக் கிரக கோலம் போட்டால் அம்பாள் அனுக்கிரகமும், நவக்கிரகப் பலன்களும் கிடைக்கும்.
- நவராத்திரி 9 நாட்களும் வீட்டுக்கு வரும் சுமங்கலி பெண்களுக்கு பரிசுப் பொருட்களுடன் பூந்தொட்டி, புத்தகத்தை தானமாக கொடுக்கும் பழக்கம் கடந்த சில ஆண்டுகளாக சென்னையில் அதிகரித் துள்ளது.
- முத்தாலத்தி என்றொரு வகை கோலம் உள்ளது. நவராத்திரி நாட்களில் இந்த வகை கோலம் போட்டால் அம்பாள் அருள் நமக்கு எளிதாக கிடைக்கும்.
- நவராத்திரி 9 நாட்களில் வரும் வெள்ளிக் கிழமையன்று 5 சுமங்கலி பெண்களுக்கு அன்னதானம் செய்து புடவை மற்றும் தாம்பூலம் கொடுத்து ஆசி பெற்றால் உடனடியாக திருமணம் கைகூடும்.
- நவராத்திரி 5ம் நாளான வரும் திங்கட்கிழமை லலிதாம்பிகையின் அவதார தின மாக கொண்டாடப் படுகிறது. அன்று 9 சிறுமிகளுக்கு பட்டுப்பாவாடை தானம் செய்தால் நினைத்தது நடக்கும்.
- நவராத்திரி 9 நாட்களும் சர்க்கரைப் பொங்கல், உளுந்து வடை, நைவேத்தியம் செய்தால் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.
- நவராத்திரி தொடர்பான சுலோகம் மந்திரம் தெரிய வில்லையா கவலை படாதீர்கள் ஓம் ஸ்ரீ லலிதா தேவியே நம என்பதை 108 தடவை சொன்னாலே போதும். உரிய பலன் கிடைக்கும்.
- நெமிலியில் திரிபுர சுந்தரி கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஒரு நவராத்திரிக்கு கல சத்தில் வைக்கப் படும் தேங்காய் அடுத்த ஆண்டு நவராத்திரி வரை கெடாமல் இருக்கும்.
- நவராத்திரி நாட்களில் முப்பெரும் தேவி யரின் கதை களை கேட்டால் அம்மைநோய் தாக்காது என்பது நம்பிக்கை.
- சுகமான வாழ்வு வேண்டும், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும், அரசியலிலும், வேலையிலும் பதவி தொடர வேண்டும்,எந்த தொழிலில் ஈடுபட்டாலும் வெற்றி மீது வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பவர்கள் நவராத்திரி பூஜையை அவசியம் செய்ய வேண்டும்.
- ராமபிரான் நவராத்திரி விரதத்தை கடைபிடித்த பிறகுதான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என்று தேவி பாகவதம் சொல்கிறது.
- கொலு பொருட்களை பாதுகாக்க வேண்டியது முக்கியம். அவைகளில் மந்திர ஆவர்த்தி இருக்கும்.
- தேவியை நவராத்திரி சமயத்தில் ஒன்பது மடங்கு அதிகமாகப் பூஜிக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.
- ஸ்ரீராமர், விஷ்ணு, விசுவாமித்திரர், காளிதாசர், அபிராமி பட்டர், பிரம்மா, வனவாசத்தில் பாண்டவர்கள் ஆகியோர் நவராத்திரி பூஜைகள் செய்து அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமானார்கள் என்று புராணங்கள் சொல்கின்றன.
- வசதி, வாய்ப்பு உள்ளவர்கள் நவராத்திரி பூஜையை தினமும் முறைப்படி ஸங்கல்பம், கணபதி பூஜை, ப்ரதான பூஜை, கண்டா பூஜை ப்ராணப் பிரதிஷ்டை, அங்கபூஜை, அஷ்டோத்திர நமாவளி, நவதுர்கா பூஜை, ஜோதி பூஜை என்று விஸ்தாரமாகச் செய்யலாம்.





உ
எல்லா புகழும் கோவிந்தனுக்கே!
பாரம்பரியமிக்க அறுசுவை உணவிற்கு

திருமணம் மற்றும் அனைத்து வீட்டு விஷேசங்களுக்கு காண்ட்ராக்ட் முறையில் குறைந்த செலவில் சிறந்த முறையில் கேட்டரிங்க சர்வீஸ் செய்து தரப்படும்


S.B. அய்யங்கார்
T-TRUST ★ R-REAL ★ S-SERVICE
TRS
கேட்டரிங் சர்வீஸ்

154/3, வடக்கு வெளி வீதி, சிம்மக்கல், மதுரை–625 001

B.O.:99/4, West adaivalanjan Street, Srirengam, Trichy, Cell:99528 06827

(0452) 4373140, 9443177140
63 810 58 599, 86 750 90 267

aanmeegamalar.com





Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்

# தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை

அரசு பதிவு பெற்ற மருத்துவமனை

TN Regn. No. : MADUAYU20210028270 ◆ ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL

41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை - 625 003.

Email : drkarthic@gmail.com Web : www.drkdhanvanthriclinic.com

Ph : 0452 - 2692647 Mobile : 87604 44404, 73731 16611, 80980 01791

## எமது கிளைகள்

**மதுரை - தெப்பக்குளம் :**
11, அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் எதிர்புறம்,
அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி,
தெப்பக்குளம், மதுரை - 625 009. அலைபேசி : **93601 32500**

**சென்னை :**
16/25, சந்தான கிருஷ்ணன் தெரு, நேரு நகர், ஹஸ்தினாபுரம் ரோடு, MIT கேட் அருகில்,
குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி : **75024 99666**


**இராம்நாடு :**
15/1, ரயில்வே லைன், சொக்கலிங்கபுரம், சர்ச் ரோடு,
ஜோய் ஆலுக்காஸ் நகைக்கடை அருகில், இராமநாதபுரம். அலைபேசி : **99441 67183**

தலைமை மருத்துவர் :

**Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்** B.A.M.S., MD., FICA., PG Geriatrics


aanmeegamalar.com

# சோழ மன்னரால் கட்டப்பட்ட சிவாலய திருப்பணிக்கு உதவலாம்!



அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை ஸ்ரீ சென்னீஸ்வரர் திருக்கோயில், வாணத்திரையன் பட்டினம் கிராமம், உடையார் பாளையம், ஜெயம் கொண்டான் வட்டம், அரியலூர் மாவட்டம். ""உலகமெல்லாம் ஆளுகின்ற ஈசா!!! போற்றி!!!! ஈசா!! போற்றி!!! உந்தனை பணிந்து வாக்குகள் செப்புகின்றேன் அகத்தியன்!!

ஏனென்றால் அப்பனே தர்மம் மறைந்துவிட்டது ஏனென்றால் அநியாயம்!! அக்கிரமங்கள்!!! மிகுந்து விட்டது. இதையன்றி கூற அதனால் கலியுகத்தில் அப்பனே சில திருத்தலங்களை நாடினாலே போதுமானது!!

""வெற்றிகள் குவியும்!!!! ஆனாலும் அவ் வெற்றியை சரியான முறையில் பயன்படுத்தி கொண்டால்தான் நலமாகும் என்று விதி இருந்தால் மட்டுமே இத்திருத்தலத்திற்கும் வரமுடியும் என்று சொல்லிவிட்டேன்.

ஆனாலும் இதையன்றி கூற வந்து வணங்கிவிட்டால் பணம், பணம், என்று மாயையை நோக்கி கொண்டிருக்கிறார்களே!! அவர்களுக்கு நிச்சயம் குவியும்!!! என்று சொல்லிவிட்டேன்.

ஆனாலும் அதைதன் (பணத்தை) நல்நோக்கத்திற்காகவே பயன்படுத்த வேண்டும்.

பின் ராஜேந்திரன் செய்தானே!!! அவை போன்று செய்து விட்டால்!!! இன்னும் பேராசை கொண்டு பின் அவந்தனும் அடியோடு கூட அழிந்து விடுவான் சொல்லிவிட்டேன்.

ஆனாலும் நிச்சயமாய் வெற்றிகள் உண்டு!!!

இதையன்றி கூற இன்னும் பல ஆலயங்கள் எவ்வாறு என்று சீரமைக்க வேண்டும் யான் சென்று விட்டாலும் இன்னும் எதையன்றி கூற என்னுடைய திருத்தலங்களை நல் விதமாகவே நீதி!! நேர்மையுடன்!!! செய்ய வேண்டும் என்று கூட ஈசனிடமே எதையென்று கூற சத்தியத்தை வாங்கிக் கொண்டான்.

இத் திருத்தலமே "பணம்" திருத்தலம் என்பதுதான் யான் சொல்லிவிட்டேன். கலியுகத்தில்.

ஆலய முகவரி மற்றும் விபரங்கள்: ஸ்ரீ பெரியநாயகி உடனுறை சென்னீஸ்வரர் ஆலயம். வாணதிரையன்பட்டணம் கிராமம் உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட ஆயிரம் ஆண்டு கோவில் திருப்பணி வேலை நடை பெற்று வருகின்றன.

2024 பிப்ரவரி மாதம் கும்பாபிஷேகம் நடந்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கோயில் திருப்பணி இறுதி கட்ட வேலைகள் நடைபெறுகிறது. பக்தர்கள் தங்களால் இயன்ற அளவு தாராளமாக நன் கொடை செலுத்தலாம் ஆலயம் தொடர்பாக விபரங்களை அறிய அணுக வேண்டிய எண். திருமதி: ஆனந்தி 8056116062

ஸ்ரீ சென்னீஸ்வரர் பக்தர்கள் அறக்கட்டளை வாணதிரையன்பட்டணம் அறக்கட்டளையின் பதிவு எண் 6/2019

Acc.Name: SRI CHENNESWARAR PAKTHARGAL TRUST Bank Name - State Bank of India. Acc.No – 38992242280. IFSC – SBIN0000998. Branch – Jayankondacholapuram. Branch Code – 998. Temple Contact No :G subramanian. +918489600728 இறைவனின் பேரருளை பெற வேண்டுகிறோம்

– இங்கனம்: இறைபணியில் சர்வமங்களம் சங்கீதா

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.

சர்வமங்களம் பூஜா ஸ்டோர்

சர்வ மங்களம்

கருங்காலி பொருட்கள் – கோமதி சக்கரம் – சங்கு – மூலிகை தூப பொடி – ஸ்படிகம் – பச்சை குன்றின் மணி – வாஸ்து பொருட்கள் – ரசமணி – ருத்ராட்சம்– ஐம்பொன் காப்பு – தாமரை மணிமாலை – நீலாஞ்சன கல் – சங்கு வளையல்

உங்கள் ஊரில் உள்ள சிவாலயங்களில் அபிஷேகம் செய்ய பசுஞ்சாண விபூதி, பஞ்ச கவ்யம், கங்கை நிர் எங்களிடம் கிடைக்கும். தமிழ்நாடு முழுவதும் கொரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

+91 978 978 3312 shop.sarvamangalam.info

# காசிக்கு நிகரான மடப்புரம் காளி கோவில்

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்துக்கு அருகிலிருக் கிறது மடப்புரம். இங்கு வளைந்தோடும் வைகையின் விளிம்பில் ஆக்ரோஷ அவதாரமாக நிற்கிறாள் பத்ரகாளி.

ஒரு பிரளய காலத்தில் மதுரை மாநகரை வெள்ளம் சூழ்ந்தபோது மதுரையை ஆட்சி செய்த மீனாட்சி, மதுரையின் எல்லையைக் காட்டச் சொல்லி சிவனை வேண்டினார்.

அப்போது ஆதிசிவன் பாம்பு வடிவில் தோன்றி மதுரை யின் நான்கு புறத்தையும் தன் உடலால் வளைத்துக் காட்டினார். அப்போது பாம்பின் படமும் அதன் வாலும் ஒன்றையன்று தொட்டுக்கொண்டு நின்ற இடம்தான் படப்புரம் எனப்பட்டது. இதுவே மருவி மடப்புரமாக ஆனது. ஒருமுறை பார்வதியை அழைத்துக்கொண்டு வேட்டைக்குக் கிளம்பிய சிவபெருமான், மடப்புரம் பகுதிக்கு வந்தார்.

காடு மிகப் பரந்து கிடக்கிறது. இதற்குமேல் உன்னால் வரமுடியாது தேவி... அதனால் நீ இங்கேயே இரு. நான் மட்டும் வேட்டையாடிவிட்டு வருகிறேன் என்று பார்வதியிடம் சொன்னாராம்.

'இந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் நான் மட்டும் தனியே இருப்பது எப்படி?' என்று பார்வதி கேள்வி எழுப்ப, அய்யனாரை அழைத்து பார்வதிக்குத் துணையாக வைத்துவிட்டுப் போனார் சிவபெருமான்.

அப்போது பார்வதி, இந்த இடத்தில் நான் இருப்ப



தால் இந்த ஸ்தலத்துக்கு ஏதாவது சிறப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்க, இந்த இடத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் இருக்கும் வைகையாற்றில் நீராடுபவர் களுக்கு காசியில் நீராடியதைக் காட்டிலும் கூடுதலான புண்ணியம் கிடைக்கும்! என்று வரம் கொடுத்தாராம் சிவபெருமான்.

அதன்பின்தான் மடப்புரத்தில் காளிவடிவில்தங்கினாள் சக்தி. காளிக்குத் துணையாக இருந்த அய்யனார் அடைக்கலம் காத்த அய்யனாராக இங்கே ஆட்சி செலுத்தினாலும், சக்தியின் வடிவமாக நின்றுகொண் டிருக்கும் பத்ரகாளிக்குத்தான் பிரதான வழிபாடு!


ஆயுதபூஜை, விஜயதசமி வாழ்த்துக்கள்

Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE.

எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அருண் ஏஜன்ஸீஸ்
பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

MAK LUBRICANTS
டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ் சிவகங்கை மாவட்டம்.
Emergency No: 9443274648

1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.
போன் : 04574-264300, 265710

குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட் வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.


aanmeegamalar.com



# மதுரையில் சகல சௌபாக்கியங்களை தரும் சர்வமங்கள சனீஸ்வர பகவான் கோவில்

சனீஸ்வரர் என்றவுடன் நாம் அனைவரும் திருநள்ளாறு சென்று பயபக்தியுடன் சென்று வணங்கி வருகிறோம்.

சனீஸ்வரர் நீதி தெய்வமாக பார்க்கப்படுகிறது. வணங்கும் நமக்கு எப்போது எது தேவையோ அதை வாரிவழங்கும் தெய்வமாக பக்தர்களால் கருதபடுகிறது. மதுரை அருகில் உள்ள திருவாதவூரில் ஏழரை அடி உயரத்தில் பிரம்மாண்டமான ஸ்ரீநீலா தேவி சமேத சர்வமங்கள சனீ ஸ்வரர் கோவில் உள்ளது.

புகழ் பெற்ற ஊரான திருவாதவூரில் திருமறைநாதர் கோவில் இதன் அருகே திருமோகூர் காளமேக பெருமாள் கோவிலும் உள்ளது. அதேபோல் திருவாசகம் தந்த மாணிக்க வாசகரின் அவதரித்த ஊரும் திருவாதாவூர் ஆகும்.

சனிபகவான் இவர் தன்னுடைய காலகட்டம் என கூறப்படும் கிரக சஞ்சாரத்தால் ஆற்றவேண்டிய கடமைகளை செய்ய பாரபட்சமில்லாமல் அனைவரையும் பீடிப்பார்.

இதற்கு சிவபெருமானும், பிரம்ம தேவரும் கூடவிதி விலக்கல்ல அப்போது அவர்களுக்கு சனிபீடிக்கும் காலம் நெருங்கியது. இதேபோல் மாண்டுக முனிவர் தவம் செய்துகொண்டிருந்தபோது சனிபகவானின் பீடிப்பு காலம் நெருங்கியது.

அப்போதைய அரசரின் ராணியிடம் நவரத்தின நகைகளை திருடிய கள்வர்கள் காவலர்களிடம் பிடிபடாமல்இருக்க தவம் செய்து கொண்டிருந்த முனிவரின் கழுத்தில் அணிவித்து சென்று தப்பி விட்டனர். காவலர்கள் அங்கு வந்த போது முனிவரின் கழுத்தில் நகைகளை பார்தவுடன் அவர்தான் திருடன் எனகருதி சிறைசேதம் செய்தனர்.

சனியின் பீடிப்பு காரணமாக நமக்கு இந்த நிலை என தவவலிமையால் அறிந்த மாண்டுக முனிவர் சனிபகவானுக்கு சாபம் கொடுத்து சனியின் வலதுகாலை ஊனமடைய செய்து வாதநோய்யை ஏற்படுத்தியதால் யாரையும் பீடிக்க முடியாத தால் தவித்து தனது தந்தை சூரியபகவான் துனணயோடு முனிவரிடம் சாபவிமோசனம் கேட்டனர்.

அதற்கு முன்னோரு காலத்தில் சிவனையும் பிரம்மனையும் பீடித்த காரணத்தால் எம்மை பிடிக்க வேண்டிய காலத்தை உண்டாக்கி என் மூலம் உனக்கு சாபம் அளித்தார்.

எனவே காளமேகபெருமாளையும், திருமறைநாதரையும் வழிபாடு செய்து சிவபெருமான் உருவாக்கிய ஏழு தீர்தங் களிலும் நீராடி தன்னிடம் பெற்ற சாபம் நீங்க மாண்டுக முனிவர் அருளினார்.

அதன்பின் சனியின் கால் ஊனத்தையும், வாதநோய்யை

சரிசெய்தார். சிவபக்தர்களை சனி பீடிக்கும் காலத்தில் ஏழரைச்சனி கட்டத்தில் துன்புருத்த கூடாது என வும், சனியுடன் சேர்த்து ஈஸ்வரன் என்ற பட்டதை சிவபெருமான் வழங்கியதாக கூறப்படுகிறது.

சனீஸ்வரர் பகவானுக்கு வாத நோய்யை நீக்கியதால் திருவாதவூர் என்று அழைக்கபடுகிறது.

திருவாதவூரில் உள்ள சர்வமங் கள ஸ்ரீசனிஸ்வர பகவான் கோவில் ஸ்தல தலைவர் நாகராஜன் கூறிய தாவது

தமிழகத்தில் ஏழரை அடி உயரத் தில் தனிசன்னதியில் மனைவி நீலாதேவியுடன் பக்தர்களுக்கு காட்சிதருகிறார்.

இக்கோவிலில் கன்னிமூளை யில் விநாயகர் அதை தொடர்ந்து சுப்ரமணியர், தர்ம சாஸ்தா, ஸ்ரீதர்பானேஸ்வரர் மீனாட்சி அம்மன் தனி சன்னதியும், வரம் தரும் ஸ்ரீவாராகிஅம்மன், குபேர பைரவர், ஆஞ்சநேயர், தன்வந்திரி பகவான், மற்றும் எமதர்மர்க்கும் சித்ரகுப்தன் சன்னதியும் வடக்கு நோக்கி சாய்பாபா சன்னதியும் உள்ளது.




27 நட்சத்திரங்களுக்கும் 27 நட்சத்திர மரங்கள் வளர்க்கப்பட்டு பராமரிக்க படுகிறது. தேய்பிறை அஷ்டமி, பிரதோஷம், அமாவாசை பௌர்ணமி மற்றும் சனிபெயர்ச்சி, குருபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி பூஜைகள் நடைபெறு கிறது.

சனிப்ரீத்தி ஹோமம், திலஹோமம் நடத்தபடுகிறது. ஆண்டு தோறும் ஜூன் மாதத்தில் சனீஸ்வரர் பகவா னுக்கு திருக்கல்யாண வைபோகம் நடைபெறும்.

தற்போது கோவிலில் புதிதாக நுழைவு கோபுரம் பணிகள் முடிந்து திறக்கபட்டுள்ளது. தினமும் வரும் பக்த்தர்களுக்கு அன்னதானம் வழங்கபடுகிறது.

தற்போது திருபணிகள் நடைபெற்று வருகிறது.

திருப்பணிகள் செய்ய பக்தர்கள் நிதிஉதவி மற்றும் பொருள் உதவி செய்து பக்தர்கள் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களை பெற திருவாதவூரில் எழுந்தருளும் பிரம் மாண்டமான சர்வ மங்கள சனீ ஸ்வரை வணங்கி அருள் ஆசி பெருவோம் என கூறினார்.

மேலூர் திருப்பூவனம் ரோட்டில் திருவாதவூர் சர்வமங்கள சனீஸ்வர பகவான் கோவில் உள்ளது.

ஆலய தொடர்புக்கு 9842113090, 9940746073.




அருள்மிகு ஸ்ரீ நீலா தேவி சமேத
சர்வமங்கள சனீஸ்வரர் பகவான் திருக்கோவில்

திருவாதவூர் - திருப்புவனம் ரோடு மேலூர் வட்டம் மதுரை மாவட்டம்

தமிழகத்திலேயே பிரம்மாண்டமாக
தனி சன்னதியில்
சனீஸ்வர பகவான் அருள்பாலிக்கிறார்.

கன்னிமூலகணபதி, முருகன், எமதர்மராஜா, சித்தர குப்தர், குபேர பைரவர்,
ஆஞ்சநேயர், தர்மசாஸ்தா, ஸ்ரீவாராகி சன்னதிகள் உள்ளது.

பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி, குருபெயர்ச்சி, சனிபெயர்ச்சி,
ராகுகேது பெயர்ச்சி நாட்களில் சிறப்பு ஹோமம் நடைபெறும்.

சர்வமங்கள சனீஸ்வர பகவானை வழிபட்டு
நம் வாழ்வில் சகல சௌபாக்கியங்களை பெறுவோம்.

ஆலயத் திருப்பணிக்கு உதவி செய்யலாம், அன்புடன் ஸ்தலஸ்தாபகர் S.நாகராஜன் மதுரை,

9842113090 / 9940756073

aanmeegamalar.com

# கண், குடும்பம், நவகிர பிரச்சனைகளை தீர்க்கும்

# ஞாயிறு ஸ்தலம்



சென்னை, திருவள்ளூர் எல்லையில் அமைந்துள்ளது ஞாயிறு ஸ்தலம் இந்த ஸ்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை புஸ்பரதேஸ்வரர் என்றும் தாயாரை சொர்ணாம்பிகை என்றும் அழைக்கப்படுகிறார். இத்தலம் சுமார் 2000 வருடங்கள் பழமையான ஸ்தலமாக போற்றப்படுகிறது,

சோழ மன்னர் வம்சத்தில் வந்த மன்னர் இந்த ஊருக்கு அருகில் இருக்கும் சோழவரத்தில் தங்கினான். காலையில் சிவ னுக்கு பூஜை செய்வது இவனது வழக்கம். அதன்படி அன்று அதிகாலையில் சிவ பூஜை செய்வதற்காக செந் தாமரை மலர்களைத் தேடினான், இறுதியில் இந்த ஞாயிறு கிராமத்தில் குளம் முழுக்கத் தாமரை மலர்கள் நிறைந்து இருந்ததைப் பார்த்து மகிழ்ந்தான்.



அதில் ஒரு குறிப்பிட்ட தாமரை பட்டொளி வீசி மின்னியது, அம்மலரின் வசிய ஒளியால் கவரப்பட்ட மன்னன் அந்த மலரைப் பறிக்க முற்பட்டான், அவன் அந்த மலரை நெருங்க நெருங்க மலர் விலகிக் கொண்டே போனது. கடைசியில் பொறுமையை இழந்தான் மன்னன். அந்த அபூர்வ தாமரை மலரை நோக்கித் தனது வாளை வீசினான்.

அந்தக் கத்தி, தாமரையை கொய்ததுடன், இத்தனை நாட்களாக தண்ணீருக்கு அடியில் பாதுகாத்து கொண்டிருந்த சிவலிங்கத்தின் மீது பட்டு லிங்கத்தின் மீதிருந்து ரத்தம் பீரிட்டு, குளம் முழுக்க பரவியது. அத்துடன் பேரொளியும் வீசியது. அதை பார்த்த மன்னனின் கண்கள் பறிபோனது.

சிவபெருமான் பேரொளியுடன் மன்னனுக்குக் காட்சி தந்து, மீண்டும் பார்வை கொடுத்தார். இதுநாள் வரை சிவபூஜை செய்து வந்ததின் பலனாகவே இறைவன் காட்சி தந்ததை எண்ணி மகிழ்ந்த மன்னன் அந்த இடத்திலேயே சிவபெருமானுக்கு கோவில் எழுப்பினான்.

மலர் வழியாக இறைவன் காட்சி தந்ததால் `புஷ்பரதேஸ்வரர்’ என்று அந்த சிவலிங்கத்திற்குப் பெயரிட்டு வழிபட்டான்.

மன்னன் வீசிய கத்தியால் ஏற் பட்ட காயம் இன்றும் லிங்கத்தின் மீது இருப்பதை காணலாம். இத னால் பார்வை சம்பந்தப்பட்ட கோளாறு இருப்பவர்கள் இந்த ஞாயிறு ஸ்தலத்திற்கு வந்து, புஷ்பரதேஸ்வரரை வணங்கினால் நல்ல பலனை பெறலாம்.

இதே போன்று, கணவன் மனைவி இடையே உள்ள பிணக்கை தீர்க்கும் பெருமானாக `புஷ்பரதேஸ்வரர்’ விளங்குகிறார். தேவர்கள் அசுரர்கள் தவறு செய்வதும், அதற்கு சாபம் பெறுவதும், அந்த சாபத்திற்கு விமோர்சனம் பெற பூமியில் உள்ள ஆலயங்களை தொழுவது வழக்கமாக நடைபெறும் நிகழ்வுகளாகும்.

தேவலோக சிற்பி விஸ்வகர்மா மகளான சமுக்ஞாவை திருமணம் செய்து கொண்டார் சூரியன். ஒருசமயம் சூரிய பகவான் ஒருசில தவறுகளை செய்ததின் பலனாக பிரம்மதேவன், சூரியனின் ஜூவாலை அதிகமாக சாபம் விடுகிறார், இந்த சாபத்தை பெற்ற சூரியனின் தீ ஜூவாலை நாளுக்கு நாள் அதிகமாகி அவரின் பக்கம் யாரும் நெருங்கி வரமுடியாத படி உடல் உஷ்ணம் அடைகிறார்.

சூரியனின் வெப்பத்தை தாங்க முடியாமல், தனது நிழலையே உருவமாக செய்து கணவனிடம் விட்டு சென்று விட்டாள் சமுக்ஞா.

தனக்கு ஏற்பட்ட இந்த சாபத்திற்கு விமோர் சனம் வேண்டி பிரம்மதேவனை குறித்து சூரிய தேவன் தியானத்தில் ஈடுபடுகிறார். சூரியனுக்கு காட்சியளித்த பிரம்ம தேவன், பூலோகத்தில் உள்ள புகழ்பெற்ற சிவாலயங்களில் வழி பட்டு, சிவனை ஆராதித்தால் சாபத்தி லிருந்து விமோர்ச்சனம் கிடைக்கும் என்று வழிமுறைகளை கூறுகிறார்.

அப்போது ஒரு ஜோதி வானில் தோன்றியது, அதை பின்தொடர்ந்து சூரியன் சென்ற போது அது ஒரு தாமரை தடாகத்தில் சென்று ஒரு தாமரை பூவிற்குள் ஐக்கியம் ஆனது. அங்கு ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து சூரியன் வழிபட்டான்.

அந்த தாமரை மலரிலிருந்து தோன்றிய சிவபெருமான் சூரியன் தனது மனைவியுடன் சேர்ந்து வாழும் படியாக அருள்புரிந்தார். சூரியனின் வேண்டுகோளுக்கிணங்க சிவபெருமான் இத்தலத்தில் எழுந்தருளினார்.

அந்த சமயத்தில் சூரியன் பூமியில் வழிபட்ட முதல் ஸ்தலம்தான் ஞாயிறு ஸ்தலம்.








aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

# சிவன் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட சக்கரத்தாழ்வார்

ஞாயிறு ஸ்தலத்தின் அருகில் மதில்சுவர் மற்றும் பள்ளிக்கூடம் கட்ட 05.11.2002 அன்று பூமியை தோண்டும் போது, பூமிக்கடியில் பச்சை மரகதக் கல்லால் ஆன ஸ்ரீ சக்கரத்தாழ்வார், ஸ்ரீ லட்சுமி நாராயண சுவாமி சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த சிலைகளை ஞாயிறு கோவி லுக்கு வெளியே இருந்த மரத்தடியில் வைத்து வழிபட்டனர்.

இதையறிந்த சென்னையைச் சேர்ந்த குருஜி என்பவர் ஞாயிறு கோவிலை ஒட்டி ஒரு ஆலயம் எழுப்பி, ஸ்ரீ சீதா சமேத சொர்ண கல்யாணராமர் ஸ்ரீ சொர்ண சுதர்சணர், ஸ்ரீ யோக நரசிம்மர், ஸ்ரீராம ஆஞ்சநேயர் ஆலயத்தை நிர்மாணித்து, பொது மக்கள் வழிபட்டு செல்கின்றனர்.





இத்தலத்தில் பல்வேறு சிறப்பு பூஜைகள், மட்டைத்தேங்காய் வழிபாடு போன்றவை பிரசித்திப் பெற்று நடை பெறுகிறது. குழந்தைபாக்கியம், தொழில் வளர்ச்சி போன்ற வற்றிற்கு இங்கு சிறப்பு பூஜைகள் பௌர்ணமி தோறும் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீசக்கரத்தாழ்வாரை தனிச் சன்ன தியில் பிரதிஷ்டை செய்தும், ஸ்ரீலட்சுமி நாராயணனருக்கு தனிச்சன்னதி அமைத்து வழிபாடு நடைபெறுகிறது.

இத்தலத்தில் யோக நரசிம்மர் மற்றும் ஆஞ்சநேயருக்கும் சன்னதிகள் உள்ளது.

– முதன்மை செய்தியாளர்,
அழகுராஜா
தொலைபேசி எண்: 9994162182

அந்த மகிழ்ச்சியில் ஞாயிறு ஆலயத்தின் மூலவருக்கு எதிரிலேயே காட்சியளிக்கிறார் சூரியபகவான். அவர் நீராடி சிவனை வழிபட்ட தால் அங்குள்ள திருக்குளத்திற்கு சூரிய தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த கோவிலில் இன்னோரு சிறப்பும் உண்டு. பிரிந்து போன கணவன் அல்லது மனைவி ஒன்று சேர இங்கே வழிபாடு நடத்துகிறார்கள்.

சூரியன் சிவபெருமானை நேரிடையாக வழிபட்ட ஸ்தலங்கள் சிறப்பு வாய்ந்த ஸ்தலங் களாக போற்றப் படுகிறது. இதுபோன்ற ஸ்தலங்களுக்கு பல்வேறு சிறப்பு உள்ளது. அந்த வகையில் தமிழகத்தில் சூரியன் ஐந்து இடங் களில் சிவபெருமானை வழிபட்டுள்ளார். இதில் முதல்ஸ்தலம் ஞாயிறு ஸ்தலமாகும். அடுத்து வரிசையாக நன்னிலம் அருகில் திருச் சிறுகுடி, ஆடுதுறை அருகில் திருமங்களகுடி, நீடாமங்கலம் அருகில் திருப்பரிதி நியமம், திருவாரூர் அருகில் தலைஞாயிறு என்று வரிசை யாக அமைந்துள்ளது.

இதுபோன்று சூரியன் வழிபட்ட ஸ்தலங்களை, பஞ்ச பாஸ்கர ஸ்தலம் என்று அழைக்கப்படுகிறது.

வருடத்தில் 7 நாட்கள் ஞாயிறு ஸ்தலத்தில் சிவபெருமான் மற்றும் தாயரை சூரியன் வழிபடுவதாக ஐதிகம் உள்ளது, இதனால் அந்த 7 நாட்கள் மதிய நேரத்தில் அர்ச்சகர்கள் சிவ பெருமானுக்கு பூஜை செய்வது கிடையாது. நேரிடையாக சூரியனே சிவ பூஜை செய்வதை மெய்ப்பிக்கும் வகையில் சித்திரை முதல் நாளிலிருந்து 7 நாட்களுக்கு சூரியன் இன்றும் வழிபட்டு வருகிறார்.

பிரகாரத்தைச் சுற்றி கமல விநாயகர், வள்ளி தெய்வானை உடனாய சுப்ரமணியர், காலபைரவர், விசாலாட்சி சமேத விஸ்வநாதர், சங்கிலி நாச்சியார் ஆகியோருக்கு தனிச் சன்னதிகள் உள்ளன. சிவபெருமானின் உற்ற தோழனாக திகழ்ந்த சுந்தரரின் மனைவியான சங்கிலி நாச்சியார் பிறந்த ஊர்தான் ஞாயிறு, இங்கிருந்து திருவெற்றியூர் தியாகராஜர் திருக்கோவிலுக்கு பூமாலை கட்டித்தரும் சேவைபுரிந்து வந்தார் சங்கிலி நாச்சியார்.

சுந்தரர் திருவொற்றியூர் இறைவனை தரிசிக்க வந்தபோது, இறைவனுக்கு பூமாலை கட்டித் தரும் தொண்டினை செய்து வந்த சங்கிலி நாச்சியாரைக் கண்டார். அவளை மணந்து கொள்ள விரும்பினார். இறைவனை அவளிடம் காதல் தூது செல்லும்படி கேட்டுக் கொண்டார்.

நட்பிற்காக இறைவனே காதல் தூது சென்றதாலும், சங்கிலி நாச்சியாரின் பிறந்த ஊர் என்ற காரணத்தால் ஞாயிறு தலத்தில் சங்கிலி நாச்சியாருக்கு தனி சன்னதி உள்ளது.

ஞாயிறு தலத்தில் இருந்து இருபதடி தூரத்தில் சங்கிலி நாச்சியார் பிறந்த வீட்டை கோவிலாக கட்டி வழிபாடு நடத்து கின்றனர். எனவே திருமண பொருத்தம் பார்ப்பவர்கள், திரு மண நிச்சயம் செய்வதற்கு முன்பு ஞாயிறு தலத்திற்கு வந்து சிவனை வணங்கி சென்றால் திருமணம் சுபமாக நடைபெறும்.



கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

# தாயும் மகளுமாக காட்சிதரும் ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி சமஸ்தான கோவில்



ஆதி சக்தியான ஸ்ரீ மாதா லலிதா திரிபுரசுந்தரியிலிருந்து தனக்கு தானே மகளாய் தோன்றியவளே ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரி இருவரும் ஒன்றே, இருவருக்கும் அணு அளவும் பேதமில்லை.

நவகோடி சித்தர்கள் தலைவியும், குல தெய்வமான வாலை எனும் ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி பலத்தலங் களில் நின்ற கோலத்தில் இரு கரங்களுடன் எழுந்தருளியிருந் தாலும், ஆதி பராசக்தி குழந்தை பருவதிருமேனியாக, பாலாவின் தியான அமைக்கப்பட்ட சுலோக முறைப்படி சிற்ப ஆகம் சாத்திரப்படி மூலவர், உற்சவராக நான்கு திருக்கரங்களுடன் மேற்கைகளில் புத்தகம் ஜபமாலை, கீழ்கரங்களில் அபயவரத முத்திரையுடன் தன் பிஞ்சுக்கரங்களாலும், கொஞ்சும் சலங்கை ஒலியால், எட்டுவயது சிறுமியே கருவறையில் கொஞ்சும் சிரிப்போடு, சூரிய சந்திரபிறை நெத்திசுட்டி, புல்லாக்கு, லோலாக்கு அணிந்து, முன் போட்ட பின்னல் சடையுடன், பட்டு பாவாடை, சட்டை அணிந்தவளாக பத்ம பீடத்தில் அமர்ந்த திருமேனியாய் எழுந்தருளியுள்ளாள். குட்டி லலிதையாக சின்னஞ்சிறுமியாக மூலவர் திருமேனியாய திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளாள்

மயிலாப்பூர் கற்பகாம்பாளின் ஆத்ம பக்தரான ஆறுமுக வாமதேவசிவம் ஐயா கனவில் குழந்தையாக பல முறை காட்சிதந்து, பல லீலைகள் புரிந்தாள். குருபீடம் 'போரூர் விடோபா சிவராமலிங்க சுவாமிகள் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் அண்ணாமலை சேஷாத்ரி மகான், காஞ்சி மகா பெரியவர் போன்ற ஞானிகளின் அருளாசி அனுபவத்தால் தனது சொந்த இடத்திலேயே முதலில் அம்பாள் படமாகவும், பிறகு 1982ல் ஸ்ரீபீடத்தில் பாலா சிலை பிரதிஷ்டை செய்து சிறிது சிறிதாக வளர்ந்து 2009ல் ஸ்ரீபீடம் ஸ்ரீபாலா சமஸ்தானமாக அன்னையின் அருளால் ஸ்ரீபாலாவிற்கான தனி ஆலயமாக திகழ்கிறது.

அகிலாண்ட கோடி ப்ரஹ்மாண்ட நாயகியாகிய மஹாத்ரி புரசுந்தரி, தன்னுடைய சாமானிய பக்தர்களுடைய மேன்மைக் காக எளிதில் மிகுந்த வாத்சல்யத்துடன் எடுத்த குழந்தை வடிவமே பாலா திரிபுரசுந்தரி.

ஓர் அரசியிடம் பழகும் பொழுது, பயம் கலந்த பக்தி இருக்கும், ஆனால் குழந்தையிடமோ அப்படி கிடையாது. அன்பு மிகுந்து இருக்கும். தன் பக்தர்களிடம் மிகுந்த வாஞ் சையுடன் உரிமையோடு விளையாட வந்த தெய்வம்: பக்கத்தில் வந்தமர்ந்து நம் குறைகளை கேட்டு துயர் தீர்க்கும் தெய்வம்! கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரும் தெய்வம்!

ஒரு தாய் தான் குழந்தையிடம் காட்டும் பாசத்திற்கு பெயர் வாத்சல்யம். இங்கோ அந்த ஜகன்மாதாவே குழந்தை வடிவம் ஏற்று பக்தனை ரக்ஷித்து கோயில் கொண்டாள். ரக்ஷிக்க மட்டுமா வருகிறாள்? பக்தனுடைய கள்ளம் கபடமற்ற பக்தியை ருசிக்க வருகிறாள்.

இந்த பாலையினுடைய பிஞ்சு பாதங்களை பிடித்து கொண்டாள் போதும், இல்லாமை என்பதே நம் வாழ்க்கையில் கிடையாது. சௌபாக்கியத்திற்கு குறைவே இருக்காது. இவளுடைய லீலா விநோதங்களுக்கு அளவேயில்லை.

பக்தனே, ஒரு நல்ல குருவிடம் சென்று, குரு சேவையில் ஈடுபட்டு பாலா த்ரிபுரசுந்தரியின் உபாஸனையை பெற்றுக்கொள், ஸ்ரத்தையாக குரு வாக்கியம் தவறாமல் பாலா த்ரிபுரசுந்தரியை நித்தம் உபாசித்து வா. பாலையின் அருள் இருந்தால் பிரம்மன் எழுதிய தலையெழுத்தும் மாறும் அவள் அருளால் இந்த ஜன்மாவில் நீ ஸ்ரீ ப்ராப்தியை அடைந்து சௌபாக்கியமானாக திகழலாம்!!!

சென்னைக்கு மிக அருகில் அமைந்துள்ள (OMR) திருப் போரூர் செங்கல்பட்டு சாலையில் செம்பாக்கம் கிராமத்தில் தானே வந்தமர்ந்த குழந்தை தெய்வமாய் சாமானிய பக்தர்களின் இந்த ஜென்மாவில் மூன்று எழுத்து மூலமந்திரத்தை கொண்ட ஞானப்பிரதாயினியாக குழந்தைகளுக்கான பிரசித்தி பெற்ற வழிபாட்டு தலமாக திகழ்கிறது.

**ஸ்ரீபாலாவின் குருமண்டல அசாத்ய ஸ்ரீசக்ரம்**: காஞ்சி புரத்தின் இரண்டாவது ஆவரண எல்லையான செம்பாக்கத்தில் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு தரும் ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி முன் அபிராமி அந்தாதியின் 97.வது பாடலான ஆதித்தன், அம்புலி, அங்கி குபேரன் என தொடங்கும் அந்தாதி பாடலில் கூறப்பட்ட ஸ்ரீவித்யா குருமார்கள் ஸ்ரீமாதா லலிதையை உபாசனை செய்து வழிபட்டதால் அசாத்திய அற்புதங்களை பெற்று சாதித்த புண்ணியர்களான சூரியன், சந்திரன், அக்னி, குபேரன், இந்திரன், மன்மதன், பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் அகத்தியர், திருமூலர், கணபதி, முருகன் ஆகியோர் சூழ, ஆயிரம்கோடி சூரியன் போல ஜுவாலிப்பதும் கோடி சந்திரனை போல் குளிர்ச்சியையும் உள்ள ஸ்ரீசக்கரமும் அதனிடையே ஐகத்தை உய்விக்கும் லோக மாதாவாக அருள் பாலிக்கிறாள்.

பிரம்மா விஷ்ணு ருத்திர சொருபிணியும், கருணைத்

ததும்பிய கடைக்கண் உள்ளவளும், சாக்ஷாத் காமாட்சி தேவியாக ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரி அமர்ந்த திருக்கோலத்தில் ஸ்ரீசக்ர சொரூபமாக அசாத்ய ஸ்ரீசக்ரம் பிரதிஸ்டை செய்யும் சமயத்தில் காஞ்சி மகா சுவாமிகள் தன் காலத்திலேயே பாலா ஆலயம் அமைக்க ஆவல் கொண்ட மாதவன் ஐயர் மூலம் வருங்காலத்தில் காஞ்சியின் கிழக்கு ஆவரண எல்லைக்குட்பட்ட பகுதியான செம்பை பாலாதிரிபுரசுந்தரி ஆலயத்தில் ஸ்ரீசக்ர யந்திரம் காஞ்சி மகாசுவாமி அருளால் பிரதிஷ்டையாகியுள்ளது.



**விஸ்வரூப மூலிகை அம்பாள் ஸ்ரீமத் ஔஷத லலிதா மகா திரிபுரசுந்தரி**: இந்நூற்றாண்டின் முதல் மூலிகை திருமேனியாக பலநூறு வருடங்களுக்கு பிறகு ஸ்ரீ பாலா சமஸ்தான ஆலயத்தில், 9 அடி உயரத்தில் மூலிகைஅம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடத்தப்படுகிறது. இந்த அம்பிகையை வணங்கினால் நோயற்ற வாழ்வு தருவாள் என்பது பக்தர்களின் தீராத நம்பிக்கை.

இந்த திருமேனி செய்ய 64மேற் பட்ட மூலிகைகள், மரப்பிசின், மரப்பட்டைகள், இலைகள் மற்றும் வேர்களில் இருந்து தயாரிக்கப்பட்ட மூலிகை சாந்தால் கொண்டும். (இரசாயனப் பொருட்கள் ஏதும் இல்லாமல்) உருவாக்கப்பட்டுள்ளது.



பாணலிங்கங்கள். சாளகிராமங்கள், வலம்புரி சங்குகள், நவரத்தினங்கள், ஸ்ரீசக்கரங்கள் இடம்பெற்றுள்ளன. சிற்ப ஆகம ஆராய்ச்சியாளர் அம்பாள் ஸ்தாபகரும், ஸ்தபதியும், ஸ்ரீவித்யா உபாசகர், சுவாமிஜி இராஜசேகர இளம்பூரண சிவம் சர்யானந்தர்) அவர்கள் வளர்பிறை காலங்களில் பலஆயிரமாயிரம் முறை மூலமந்திர ஜபம் செய்து உருவேற்றி சுமார் 8 ஆண்டுகள் ஆண்டுகள் கடின உழைப்பில் லலிதாம்பிகை திருமேனியை வடிவமைத்து உலகமுய்ய சுவாமிகள் தந்தருளியுள்ளார்கள்.

தாந்திரீக முறையில் இந்த அம்பிகை மந்திர, யந்திர, தந்திர, அஸ்திர, சஸ்த்திரம் என்ற முறையில் அமையப்பெற்றவள் ஆவாள். திதி நித்யா தேவதைகளை வளர்பிறை தேய்பிறை படிகளாகக் கொண்ட ஆலயத்தின் மேல்தள மாடியில் உள்ள கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நின்ற கோலத்தில் அங்குச, பாசம் இரண்டும் பிரயோகத்தில் இருக்க, கீழ்க்கையில் புஷ்பபாணம், கரும்பு வில் ஏந்தி அம்பிகை மகா சௌந்தர்ய ரூபத்துடன் ஒன்பது அடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் மொழிக்கும் நினைவுக்கும் எட்டா பராசக்தி விஸ்வரூபத்தில் அருள்பாலிக்கின்றாள்

**மூலிகை அம்மனுக்கு அபிஷேகம் கிடையாது.தினசரி பாதபூஜை மட்டுமே**: குழந்தைகள் நலன் பொருட்டு தாய் மருந்து உண்பது போல கலிதோஷத்தை நீக்கி சவுபாக்கியம் ஆனந்தம் ஆரோக்கியம் தந்திட நம் நலன் பொருட்டு மகாசக்தி சித்த மருத்துவச்சியாக அனுக்கிரகம் புரிகின்றாள். நோயற்ற வாழ்வு பெறுவதே இந்த அம்பிகையின் தரிசன பலனாகக் கூறப்படுகிறது. இந்த ஔஷத லலிதாம்பிகை கோவில் கொண்டிருக்கும் சன்னிதி “ஸ்ரீசக்ர ராஜசபை" என்று போற்றப்படுகிறது. ஏனென்றால் இங்கு அம்பிகை வாராகி மாதங்கி ஸ்ரீசக்ரமகாமேரு உடன் பரிவாரங்களுடன் தர்பாரில் கோலோச்சி பரிபாலனம் செய் வதாக ஐதீகம். ஹரி, ஹரன், அம்பிகையை வழிபட்ட பலனைத்தரும் மும்மூர்த்தி சொரூபிணியாக திகழ்கிறாள். அம்பாள் ஆஞ்ஞையாலும், குருநாதர்களின் வழிகாட்டு தலாலும் மூலிகை திருமேனி பற்றிய ஆய்வுகள் செய்து சித்தர்களின் முறைப்படி குண்டமண்டலங்கள் அமைத்து வேள்விகள் செய்து வளர்பிறை காலங்களில் மட்டுமே இத்திருமேனி அமைக்கப்பட்டது. இத்தகைய பேரழகும் பெருமைக்குரிய மகாசக்தியாக ஸ்ரீவாஞ்சா. ஸ்ரீபராபட்டாரிகா, சர்வலோக மஹாராணி ஸ்ரீமத் ஔஷத திரிபுரசுந்தரி அங்க உபாங்க ப்ரத்யங்க தேவியர்களோடு அமைக்கப்பட்ட ஸ்ரீவித்யா தந்திர ஆலயம்.

**ஸ்ரீ தருணீ மகா திரிபுர சுந்தரி (மனோன் மணி குமரிப்பருவம்)**: இச்சாசக்தி அம்சமாக வீற்றிருப்பவள். பஞ்சதசாக்ஷரி வித்தையே ஸ்ரீதருணீதிரிபுரசுந்தரி, கருவறை விட்டே வெளியே வராமல் சிவத்தே கலக்கும் பொருட்டு அருளே அழகாகி கல்யாணசுந்தரி, குலசுந்தரியாக நமக்கு திருமணப்பேறு தருபவளாக தருணீ அம்பிகையாக செம்பொன் திருமேனியுடன் நின்ற திருக்கோலத்தில் அங்குசபாசம் அபயவரத முத்திரையுடன் எப்போதும் சர்வ அலங்காரத்தில் வீற்றிருப்பவள். இவ்வம்பிகை நவசக்தி அம்சமாக திரிபுரா, திரிபுரேசி, திரிபுர சுந்தரி, திரிபுர வாசினி, திரிபுராஸ்ரீ, திரபுரமாலினி, திரிபுர சித்தா, திரிபுராம்பா, மகா திரிபுர சுந்தரி நவயோக நவசக்கரங்களை தன்னகத்தே கொண்டுள்ளாள் தருணீ மகாதிரிபுரசுந்தரி.

**ஸ்ரீ மகா வாராகி, ஸ்ரீஇராஜமாதங்கி**: ஸ்ரீமத் லலிதையின் சேனாதிபதி ஸ்ரீ மகா வாராகி தேவியும் ஸ்ரீஇராஜமாதங்கி தேவி எனும் சியாமளா தேவியும் வேறெங்கும் காண இய லாத அஷ்டபுஜ மூர்த்தியாக மூலவர் மற்றும் உற்சவராக எழுந்தருளியுள்ளாள். ஸ்ரீமத் ஔஷத லலிதாம்பாள் மூலிகை அம்பாள் எதிரில் மேற்கு பார்த்தவாறு ஸ்ரீமகா சிவகாமேஸ்வர சுவாமி ஸ்படிக சிவலிங்கத்திருமேனி பிரதிஷ்டையாகியுள்ள சதாசிவபீடம். மூலிகை அம்பாளை தரிசிக்க 15 திதி நித்யா படி ஏறி லலிதையை தரிசித்து எதிர்படி வழியே இறங்க வேண்டும். மூலிகை அம்பாள் தரிசனம் செய்ய ஆண்கள் கட்டாயம் சட்டை பனியன் கழற்றி விட்டு செல்ல மட்டுமே அனுமதிக்கப்படுவர். இத்தலத்தில் பச்சை கற்பூர ஆரத்தி மட்டுமே நடைபெறும். தினசரி இரண்டுகால பூஜை நடைபெறும். தினமும் ஆலய தரிசன நேரம்: காலை 8.00-1,00 மணி வரை, மாலை 4.30-8.00 மணி வரை தரிசித்து சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெருக. ஆலய தொடர்பு எண்: 97899 21151.

## பாறைவடிவில் காட்சியளித்த பாபா

# திருச்சியில் ஒரு சீரடி

2009–ம் ஆண்டின் ஒரு நாள் நடுநிசியில் நடந்தது அந்த அற்புத நிகழ்வு. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பக்தர் ஒருவரை யாரோ தட்டியெழுப்புவது போன்ற உணர்வு. ஓரிருமுறை அந்த உணர்வை பொருட்படுத்தாமல் ஆழ்ந்த உறக்கத்தில் தன்னை மறந்திருந்த அந்த பக்தரை இடி யோசை போன்ற அசரீரி திடுக்கிட்டு எழ வைத்தது.

சப்தநாடிகளையும்பேரமைதிக்குள்ஆழ்த்தும்சாய்பாபாவின் குரல்தான் அது. ஊர் உறங்கும் வேளையில் அந்தக்குரல் மட்டும் பக்தரின் காதில் ரீங்காரமிட்டபடியே இருந்தது. பக்தா எழுந்திரு உன்னைத்தேடி நான்வந்திருக்கிறேன். என் குரல் உனக்கு கேட்கவில்லையா? என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் பக்தரின் மனதுக்குள் ஊடுரு வியது.


திடுக்கிட்டு எழுந்த அந்த பக்தர் தான் கண்டது கனவு என்றெண்ணி மீண்டும் துயில்கொள்கையில், விடாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது அந்த அசரீரி. என்னைத் தேடி சீரடிக்கு நெடுந்தூரம் கவலைகளோடும் அல்லலோடும் உடல்சோர்வோடும் பயணித்து வரும் பக்தர்களின் நிலைமை கண்டு மனமுருகி வந்துள்ளேன். தெற்கே எனக்கு ஒரு சீரடியை போல் எழுப்பு. அங்கு நீக்கமற நிறைந்து அருள் பாலிக்கக் காத்திருக்கிறேன் என்றார் சாய்பாபா.

தொடர்ந்து தினமும் இரவில் அதே குரல் பக்தரின் நித்திரையைக் கலைத்தது. தெய்வீக அனுபவமாய் பாவித்து அதனை அலட்சியம் செய்யாமல் கூர்ந்து கவனித்தபோது,தென்னாட்டில் காவிரியும் கொள்ளிடமும் பாயும் ஆன்மீக மாநகரமான திருச்சி சமயபுரம் அருகே அக்கரைப்பட்டி என்னும் இடத்தில் சீரடியைப்போலவே இருபாறைகளுக்கு இடையில் முளைத்த வேப்பமரத்தின் அடியில் அமர்ந்திருந்து அருள்பாலிப்பதை சாய்பாபா தத்ரூப மாக வெளிப்படுத்தினார். ஆம். அவருக்குரிய இடத்தை அவரே காண்பித்தார்.

சாய்பாபா கட்டளைப்படியே இந்த குருஸ்தானத்தில் 2011ம் ஆண்டு ஏப்ரல் 21ம் தேதி சாய்பாபா கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். தொடர்ந்து 2016ம் ஆண்டு பிப்ரவரி 12ம் தேதி தென்சீரடி ஆலயத் துக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

சாய்பாபா காட்சியளித்த ஸ்ரீசாய்கற்பகவிருக்ஷா அறக்கட்டளை நிறுவனர் கே.சந்திரமோகன் தலைமையில் பக்தர்களின் உதவியோடு இரவு பகலாக கட்டுமானப்பணி நடந்து முடிந்து கடந்த 2020ம் வருடம் ஜனவரி 20ம் தேதி பீடாதிபதிகள், ஆன்மீகத் தலைவர்கள், பக்தர்கள், தொண்டர்கள் மற்றும் லட்சக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் கோலாகலமாக, மஹா கும்பாபிஷேகம் கண்டுள்ளது தென்ஷீரடி சாய்பாபா ஆலயம்.

ஷீரடிக்கு நிகரான மகிமையோடும் கம்பீரத் தோடும் கட்டிடக்கலையம்சம் குறையாமல் அச்சு அசலாக மற்றொரு சீரடியாக தென்சீரடி உருவாகியுள்ளது. சீரடியின் எந்த அம்சமும் குறைவுபடாத அளவிற்கு சமாதி மந்திர், சாவடி, துவாரகாமாயி, லெண்டித்தோட்டம் என சகலமும் தென்சீரடியில் அமைந்திருக்கிறது. சாய்பாபாவிற் கான ஆராதனைகளும், பூஜைகளும் சீரடியில் நடப்பது போல் நடக்கின்றன. காலையில் காகட் ஆரத்தி, மதிய வேளையில் மத்யான் ஆரத்தி, மாலையில் தூப் ஆரத்தி, இரவில் சேஜ் ஆரத்தி என 4 வேளை ஆரத்திகளும் நடக்கின்றன.









தினந்தோறும் பக்தர்களுக்கு அன்னதானமும் நடக்கிறது. சாய்பாபாவிற்கு உகந்த வியாழக்கிழமைகளில் மட்டும் ஆயிரங்களின் எண்ணிக்கையில் பக்தர்களின் வருகை அதிகரித்தபடியே உள்ளது. அநேக அற்புதங்களை நிகழ்த்தி வருகிறார். குழந்தை வரம், திருமண வரம் என வரங்களை வாரித்தருகிறார். மனக்குழப்பம், குடும்ப பிரச்னை நீக்கி அமைதியையும் நம்பிக்கையையும் பக்தர்களுக்கு வழங்கி வருகிறார். ஆன்மீக தலைவர்கள், திரையுலக பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், வெளிநாட்டு பக்தர்கள் என தினமும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் தென்சீரடிக்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

சீரடியின் பலனை மகிமை குறையாமல் சாய்பாபா தென்சீரடியில் வழங்கி வருவதாக பக்தி பரவசம் பொங்க கூறுகின்றனர். சீரடி செல்ல முடியாதவர்கள் தென்சீரடியில் அதன் பலனை பெற முடியும் என்பதுதான் சாய்பாபா இந்த தலத்திற்கு வழங்கியுள்ள சிறப்புத்தகுதி.

வடஇந்தியாவிற்கு மகாராஷ்டிரத்தில் சீரடி என்றால், தென்னிந்தியாவிற்கு திருச்சி அக்கரைப் பட்டியில் தென்சீரடி என்ற புகழை இந்த ஆலயம் பெற்று உள்ளது.

ஒருமுறை வந்தால் மீண்டும் மீண்டும் வரத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. வாழ்நாளில் ஒருமுறையாவது தென்சீரடி நாதனை தரிசித்துசீரடி சென்ற பலனையும் பக்தர்கள் அடையலாம். சீரடியில் இருப்பது போல் பக்தர்களுக்கு வழங்க சிறப்பு ஊதியும் தயாரிக்கப் பட்டு வழங்கபடுகிறது. ஆலயம் செல்ல திருச்சி சத்திரம்பஸ்நிலையம், டோல்கேட், சமயபுரம் அகிய பகுதியில் இருந்து நேரடிபஸ்வசதியும் ஆட்டோ வசதியும் உள்ளது.

– முதன்மை செய்தியாளர், அழகுராஜா
தொலைபேசி எண்: 9994162182



# 24 மணி நேரம் அன்னதானம் நடைபெறும் பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் விலக்கில் பஞ்சபூதேஸ்வரம் என்னும் இடத் தில் உள்ளது, ஸ்ரீ மகா பஞ் சமுக ப்ரத் யங்கிரா தேவி திருக்கோவில்.



இது முழுவதும் கருங்கல்லால்அமைக் கப்பட்டது. இந்த கோவில் கோபுரம் தமிழகசிற்ப கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.



இந்த கோவிலில் ஒவ்வொரு மாதம் அமா வாசை தினத்தில் உலக மக்கள் நல மாக வாழவேண்டி ப்ரத்யங்கிரா யாகமும், பவுர்ணமி தோறும் திருவிளக்கு பூஜை யும் நடைபெறும். கோவிலில் மற்றொரு சிறப்பம்சமான 24 மணி நேரமும் நடை பெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ள பக்தர்கள்இரவு, பகலாக குவிகின்றனர்.

தினமும் காலை அன்னதானத்தில் சர்க்கரை பொங்கல், வெண் பொங்கல் அல்லது உப்புமா, கேசரி, வடை வழங்கப்படுகிறது. மதியம் 2 வகை காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோர் உடன் நடந்து வருகிறது. சித்திரை தமிழ் வருட பிறப்பு, ஆடியில் சத சண்டி யாக பெரு விழாவில் மூன்று வேலையுமே சிறப்பு அன்ன விருந்து நவ ராத்திரி, தீபாவளி பண்டிகை யில் அறு சுவை விருந்தும் தை பொங்கலுக்கு பக்தர்களுக்கு கரும்பும் வழங்கப்பட்டு வருகிறது.

பக்தர்கள் பசியோடு இருக்ககூடாது. என்பதற்காக எப்போதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இதற்காக அன்னதான குழு ஏதும் கிடையாது. பக்தர்களே இங்கு நடைபெறும் அன்னதானங்களில் பங்கேற்று செல்லும் போது அன்னதானம் சப்ளை செய்யும் சேவையும் செய்கிற காட்சியை இங்கு காணலாம்.

இது பற்றி கோவிலில் உள்ள ஞானசேகர சுவாமிகள் கூறியதாவது தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். வெளியூர்களில் இருந்து வருபவர்கள் பசியோடு சாமி கும்பிடக் கூடாது. பசியாறி சாமி கும்பிடும் போது வயிறு நிறைந்து மன நிறைவோடும் சாமி கும்பிட்டு செல்வார்கள்.

ஆலயத் தொடர்புக்கு: ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கரா வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம், செல்: 98428 58236




# சண்டிகேஸ்வரர்



சிவ பெருமானை வணங்குபவர்கள் சண்டிகேஸ்வரரை வணங்காமல் இருக்க முடியாது.

சிவபெருமானின் பிரகாரத்தை சுற்றி வருகையில் அவருக்கு இடது புறம் அமர்ந்திருப்பவர். நம்மில் பெரும்பாலானவர்களுக்கு சண்டிகேஸ்வரர் என்பதை விட, கைகளை தட்டி வணங்கும் தெய்வம் என்றால் எளிதில் நினைவு வரும்.

யார் இந்த சண்டிகேஸ்வரர் இவரை வணங்கும் போது, ஏன் கைகளை தட்ட வேண்டும்? பெரியாபுராணத்தின் படி சண்டிகேஸ்வரரின் இயற்பெயர் விசாரசர்மன். இவர் சிறு வயதாக இருந்த போது மாடு மேய்க்கும் தொழில் செய்து வந்தார்.

சிறு வயதிலேயே சிவ பக்தி மேலோங்கி இருந்ததால் மாடு மேய்க்கும் தொழில் செய்கையில் பணிக்கு இடையே மண லால் சிவலிங்கம் செய்து ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டு வந்தார்.

இவரின் தவ வலிமையாலும், தன்னுடைய மேய்ப்பான் மீது கொண்டிருந்த அதீத அன்பினாலும், விசாரசர்மன் மேய்த்த மாடுகள் அவர் உருவாக்கிய மணல் லிங்கத்தின் மீது தானாக பாலை சுரந்து அபிஷேகம் செய்தன. இந்த நிகழ்வு தினசரி தொடர்ந்தது.

இந்த செய்தி மாட்டின் உரிமையாளரை எட்டிய போது அவர் விசாரசர்மனின் தந்தையான எச்சதத்தனிடம் சென்று, "உங்கள் மகன் மணல் லிங்கம் அமைத்து தியானிக்கிறான். அதற்கு என் பசுக்களை கொண்டு அபிஷேகம் செய்ய வைக்கிறான். இதனை கண்டியுங்கள் என புகார் அளித்தார்".

இதனை ஆராய விரும்பிய எச்சதத்தன் ஒரு நாள் மறைதிருந்து கண்காணித்தார். அப்போது மணல் லிங்கத்தின் முன் விசாரசர்மன் ஆழ்ந்த தியானத்தில் இருக்க, மாடுகள் தாமாகவே லிங்கத்தின் மீது பால் சுரந்து அபிஷேகம் நிகழ்த்தின. இதனை கண்டு கடும் சினம் கொண்ட தத்தன் அந்த மணல் லிங்கத்தை காலால் தகர்த்தார். இதனால் தவம் களைந்து எழுந்த விசாரசர்மன் ஒரு குச்சியால் தந்தையின் காலை தாக்கினார்.

அந்த குச்சி கோடாரியாக மாறி அவர் தந்தையின் காலை கடுமையாக தாக்கியது. அப்போது தோன்றிய சிவபெருமான், விசாரசர்மனின் பக்தியை மெச்சி அவர் தந்தையின் கால்களை சீராகி. விசாரசர்மனுக்கு ஆச்சர்ய வரமொன்றை அளித்தார்.

அதாவது அன்று முதல் அவர் சண்டிகேஸ்வரர் என்றும், சிவனின் சொத்துக்களான கணங்கள் அனைத்தையும் காவல் காப்பவராக அவர் திகழ்வார் எனவும், தனக்கு நிகழ்ந்த பூஜைகளும் மரியாதையும் இனி அவருக்கும் கிடைக்கும் எனவும் அருளினார்.

இதனை அடுத்து சிவ கணங்களை, சிவன் சொத்துக்களை காவல் காத்து ஆழ்ந்த தியானத்தில் இருக்கிறார் சண்டிகேஸ்வரர். எனவே சிவனை வணங்கி வரும் பக்தர்கள் இவரிடம் வந்து, மிக மென்மையாக கைகளை உதறி தாம் எந்த சிவ சொத்தையும் எடுத்து செல்லவில்லை.

அவருடைய அருளையும், ஆசியையும் தவிர வேறு எதையும் எடுத்து செல்லவில்லை என கைகளை உதறி காட்ட வேண்டும். பிரசாதத்தை எடுத்து செல்லும் அனுமதியை அவரிடம் கேட்டு எடுத்து செல்ல வேண்டும்.

இந்த கைகளை உதறும் வழக்கமே கால போக்கில் கைகளை தட்டும் பழக்கமாக மாறிவிட்டது. எனவே அவருடைய தவத்தை கலைக்கும் வண்ணம் கைகளை தட்டாமல், மென்மையாக கைகளை உதறி சண்டிகேஸ்வரரை வணங்குவது நன்மை பயக்கும். இவர் 63 நாயன்மார்களுள் ஒருவராகவும் இருக்கிறார்.

## ஏன் பகலில் மட்டுமே இறுதி சடங்குகள் நடைபெறுகிறது



அனைத்து இறுதி சடங்குகளும் பகல் நேரத்தில் மட்டுமே செய்ய வேண்டும், உடலை தகனம் செய்வது முதன்மையானதாகும். ஏனெனில் இரவு என்பது எதிர்மறை சக்திகள் அதிகம் உலவும் மேலும் அவற்றின் பலமும் இரவு நேரங்களில் அதிகம் இருக்கும். இறந்த எதிர்மறை சக்திகள் எப்பொழுதும் மற்ற உடல்களில் நுழைய முயலும்.

எதிர்மறை சக்திகளின் இந்த தாக்குதல்களை தவிர்க்கவே உடல் பகல் பொழுதில் தகனம் செய்யப்படுகிறது. அறிவியல்ரீதியாக கூறும் போது இறந்தவர்களின் உடலில் இருந்து வெளிப்படும் நுண்ணுயிர்களின் அளவு அதிகமாக இருக்கும். இது சுற்றி இருப்பவர்களுக்கு எளிதில் தாக்கக்கூடும். அதனால்தான் உடல் தகனம் பகலில் செய்யப் படுகிறது.

## உடல் எடையை குறைத்து ஆரோக்கியத்தை கொடுக்கும்

# நவராத்திரி விரதம்

இந்து மதத்தில் அனைத்து பண்டிகைகளும், விழாக்களும் அறிவியல் காரணங்களுடன் தொடர்புடையவை. நவராத்திரியும் அப்படியே...

புரட்டாசி மாதம் அமாவாசை திதி தொடங்கி தசமி திதி வரை 10 நாட்கள் கோலாகலமாக நவ ராத்திரி பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது.

நவராத்திரி பண்டிகையை முதன் முதலில் ராமர்தான் கொண்டாடியதாக கூறப்படுகிறது. ராமபிரான் நவராத்திரி விரதத்தை கடைபிடித்த பிறகுதான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என்று கூறப்படுகிறது.

நவராத்திரி நாட்களில் பெண்கள் கன்யா பூஜை செய்வதால் சகலசெல்வங்களையும் பெறலாம். விஜயதசமி தினத்தன்று பெருமாள் கோவில்களில் வன்னி மரக்கிளையை வைத்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்து பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும்.

10 நாட்களில்...

முதல் 3 நாட்கள் துர்காவையும்,

அடுத்த 3 நாட்கள் லட்சுமியையும்,

கடைசி 3 நாட்கள் சரஸ்வதியையும் போற்றி வழிபாடு செய்ய வேண்டும் என்பது ஐதிகம்.

துர்க்கையின் 9 அவதாரங்களையும் ஒவ் வொரு நாளும் போற்றி பக்தியுடன் மனமுருகி பிரார்த்தனை செய்திட வேண்டும்.

நவராத்திரி செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் வருகிறது. இந்த காலம் தான் இலையுதிர்காலத்தில் இருந்து குளிர்காலத்திற்கு மாறும் நேரம். பருவநிலை மாற்றத்தின் காரண மாக, நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் காலம் இது. பொதுவாகவே குளிர் காலம் உடலின் நோய் எதிர்ப்பு செல்களையும், கொழுப்பின் கலவையையும் பாதிப்படைய செய்வதாக அறிவியல் விஞ்ஞானம் கூறுகிறது.

அந்த வகையில் இந்த மாதங்களில் பகல் குறைவாகவும் இரவு அதிகமாகவும் காணப்படும். இதனால் வடக்கு பகுதியில் குளிர் அதிகரிக்கும். இந்த குளிரால் மனித உடலில் மாற்றங்கள் ஏற்பட்டு நோய்களுக்கு காரணமாகி விடுகின்றன. அதிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ளவே இந்த நவராத்திரி விரதங்கள்.

இந்து முறைப்படி தொடர்ந்து 9 நாட்களும் மக்கள் இடைவிடாத விரதத்தில் இருக்கிறார்கள். குளிர்காலத்தில் விரதம் இருப்பதால் உடலில் உள்ள கொழுப்புக்கள் எளிதாக கரையும். உடல் எடை குறைக்க போராடுபவர்கள் இந்த 9 நாள் விரதத்தை நிச்சயம் எடை குறைப்பிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

அத்துடன் விரதம் இருக்கும் காலகட்டத்தில் சாத்வீக உணவை உட்கொள்ள வேண்டும். தூய்மையான, இயற்கையான, உயிர்ப்பான, சுத்தமான, ஆற்றல் மிக்க உணவுகளை உட்கொள்ள வேண்டும். பழங்கள், தயிர், கல் உப்பு, பருவகால காய்கறிகள் மற்றும் மல்லி மற்றும் கருப்பு மிளகு இவைகளை சேர்த்துக் கொள்ளலாம்.



இந்த வகை உணவுகள் மனதிற்கு அமைதியான உணர்வுகளை வழங்குகின்றன. அத்துடன் உடலில் சூட்டை அதிகப் படுத்தும் வெங்காயம், பூண்டு போன்றபொருட் களையும் தவிர்க்க வேண்டியது அவசியம். இதனால் செரிமான மண்டலம் சுத்தமாவதோடு உடலில்உள்ள நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது.

இந்த விரதம் கொழுப்பை குறைத்து குடலை சுத்தப்படுத்த உதவுகிறது. செரிமான மண்டலத்தை பலப்படுத்துகிறது.




தேக்கு மர கதவுகள்
(200 டிசைன்களில்)
ஜவஹர் மரக்கடை
ரெடிமேட் நிலை கதவு ஜன்னல்கள்
GOB, T.P.K.ரோடு, மதுரை-3
94433 18482

D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்

பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606

# வேலும் திருச்செந்தூரும்

## கடலில் ஒரு சந்தன மலை

குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என சொல்கிறார்கள். திருச்செந்தூரில் குன்றுஎங்கே உள்ளது? கடல்தானே உள்ளது என்ற கேள்வி எழும்.

உண்மையில் திருச்செந்தூர் சந்தனமலை. சந்தனாசலம் என்று அதற்குப் பெயர். திருச்செந்தூர் கோவில் மூலஸ் தானம் குடவரை . மலையைக் குடைந்து செய்தது.

## முருகனுக்கு ஆலோசனை வழங்கிய குருபகவான்

திருச்செந்தூர் கோவிலின் மூலஸ்தான மூர்த்தியான ஸ்ரீபாலசுப்பிரமணியருடன் சேர்ந்தே குருபகவானும் பிரதி ஷ்டை செய்யப்பட்டு உள்ளார்.

இங்கே குருபகவான் யந்திர ரூபமாகவும், காயத்ரீ மந்திர ரூபமாகவும், நித்யவாஸம் செய்து ஸ்ரீபாலசுப்பிரமணியரை வந்து தரிசிப்போரின் கஷ்டங்களை நீக்கி குரு அருள் புரிகிறார். திருச்செந்தூரில் முருகப்பெருமான் சூரபத்மனை வதம் செய்தபோது அவருக்கு அருகில் இருந்து ஆலோசனைகள் வழங்கி முருகனை வெற்றி வேலனாக்கியவர் குருபகவான்...!!

அதனால்தான் திருச் செந்தூர் முதன்மை குரு ஸ்தலமாக அறியப்படுகிறது. ஜோதிடத்தில் குரு பகவானே புத்திரகாரகன் என்றும், தனகாரகன் என்றும் அறியப்படுகிறது.

புத்திர பாக்கியம், தனம் வேண்டுவோர் கண்டிப்பாக வழிபட வேண்டிய முதன்மை ஸ்தலம் திருச்செந்தூர் முருக பெருமான் தான்..!!

மூலவர் தரிசனம் செய்த பின்னர் மறக்காமல் கோவில் யானைக்கு கரும்பு வாங்கி தாருங்கள். குருவுக்கு உண்டான அருமையான பரிகாரம் இது..!!

சுய ஜாதகத்தில் குரு பகவான், நீசம், பகை, மறைவு ஸ்தானங்களில் இருப்பவர்கள் இங்கு வந்து முருகனை வழிபட கண்டிப்பாக குரு பகவான் அருள்கிட்டும்.

## வேல் பெரிதாக இருக்கலாமா?

முருகன் கையில் இருக்கும் வேல், முருகன் சிரத்தை விட உயர்ந்து காணப்படும் படங்களை வீட்டில் வைத்து வணங்கலாகாது என்பார்கள்.

இதற்கு காரணம் உள்ளது. முருகன் கையில் உள்ள வேல் காது வரை அமைந்திருக்க வேண்டும். ஆயுதம் இறைவனுக்கு அடங்கித்தான் இருக்க வேண்டும். என்பதால் முருகப்பெருமானைவிட வேல் சிறிதாக இருக்கவேண்டும் என்று வரையறுத்துள்ளனர்.






ஆயுதபூஜை, விஜயதசமி
நல் வாழ்த்துக்கள்




இறைபணியில் P.முருகேசன் உரிமையாளர்

SWAMY VILAS PALANI JAVADHU VASANAI VIBOOTHI

சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

# திருநீறு அணிந்தால் தீரும் பிரச்னைகள்

- ❖ உடல் நாற்றம் போகும்
- ❖ நோய்க்கிருமிகள் சாகும்
- ❖ தீட்டுகள் கழியும்
- ❖ வியாதிகள் ஒழியும்
- ❖ பில்லி சூனியம் போகும்
- ❖ முகத்திற்கு அழகுதரும்
- ❖ ஞாபகசக்தி வளரும்
- ❖ புத்திக்கூர்மையாகும்
- ❖ ஞானம் உண்டாகும்
- ❖ பாவங்களை தீர்க்கும்
- ❖ பரமனடி சேர்க்கும்.



கங்காளன் பூசும் கவசத்
திருநீற்றை மங்காமல்
பூசி மகிழ்வாரே
யாமாகில் தங்கா
வினைகளும்
சாரும் சிவகதி
சிங்காரமான
திருவடி சேர்வரே.

– திருமூலர்

# பெருமாள்கோவில்தீர்த்தம் சர்வரோகநிவாரினி

பெருமாள் கோயிலில் தீர்த்தத்தில் கலக்கப்படும் பச்சைக் கற்பூரம், வாசனையாகவும் வித்தியாசமான சுவையுடையதாகவும் இருக்கும். உடலில் ரத்தக்காயம் ஏற்பட்டால், நாம் உடனே காயம் செப்டிக் ஆகாமல் இருக்க தடவுகிறோமே பென்சாயின் ! அது வேறொன்றுமில்லை, பச்சைக் கற்பூரக் கலவையில் உருவாவதுதான்.

கர்ப்பக்கிருகத்தில் நம்மேல் பாயக்கூடிய பாஸிடிவ் காந்த அலைகளைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் பல கோயில்களில் ஆண்கள் சட்டை அணியாமல் வர வேண்டும் என்று சொல்கிறார்கள்.

பொதுவாகப் பெண்கள் அணியும் தங்க நகைகளில் கலந்திருக்கும் செம்பின் மூலம் அவர்களுக்கும் இதே எனர்ஜி பாய்கிறது.

கோயில் பிராகாரத்தை 11 முறை, 108 முறை என்று பிரதட்சணம் செய்யும்போது, நமது உடலின் கொழுப்பு தானாக எரிந்து ஆரோக்கியம் கூடுகிறது.



அந்தக் காலத்தில் கோயிலுக்குச் சென்று பிரதட்சணம் செய்ததாலேயே சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் தவிர்க்கப்பட்டன.

இதோடு வேத கோஷமும், பிரார்த்தனை சுலோகங்களும் சொல்லும்போது, உடலுடன் சேர்ந்து உள்ளமும் புத்துணர்ச்சி பெறுகிறது.

# பழனி முருகன் கோவில் அலங்கார பூஜை நேரம்



பழனி முருகன் ஒவ்வொரு நாளும் எந்த எந்த நேரத்தில் என்னென்ன பூஜையில் எந்த வித அலங்காரத்தில் காட்சியளிப்பார் என்று இந்த பதிவில் பார்க்கலாம்.

பழனி முருகன் காலை 06.40AM மணிக்கு விளா பூஜையில் சன்யாசி அல்லது ஆண்டி அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

காலை 08.00 AM மணிக்கு நடைபெறும் சிறுகாலசந்தி என்ற பூஜையில் பால சுப்பிரமணியர் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

காலை 09.00 AM மணிக்கு நடைபெறும் காலசந்தி பூஜையில் பாலசுப்பிரமணியர் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

மதியம் 12.00 PM மணிக்கு நிகழும் உச்சிக்கலாம் பூஜையில் வைதிகாள் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

மாலை 05.30 PM மணிக்கு நடக்கும் சாயரட்சை பூஜையில் இராஜ அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

இரவு 08.00 PM மணிக்கு நடைபெறும் அர்த்தஜாம பூஜையில் புஷ்ப அலங்காரத்தில் காட்சியளிப்பார். மேல் கூறப்பட்டுள்ள நேரங்களில் உங்களுக்கு விருப்பான அலங்கார பூஜை நேரத்தில் சென்று தமிழ் கடவுளான பழனி முருகனை தரிசித்து அவன் அருளை பெறுங்கள்.






# 900 நாட்களாக உணவு வழங்கும் பணியில் மதுரையின் அட்சய பாத்திரம்







காஞ்சியின் கருணைக்கடல் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா' நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அவரை ஆத்மார்த்த குருவாக ஏற்றுக் கொண்ட பக்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல நிகழ்ச்சிகளே அதற்குச் சான்று. காஞ்சியில் அருளும் ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா, மீனாட்சி அருளாட்சி செய்யும் மீனாட்சி பட்டணமான மதுரையில் குடி கொண்ட வரலாறும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.

மகா பெரியவாவின் தொண்டர்களில் ஒருவர் நெல்லை பாலு. காஞ்சிபுரத்தில் பத்திரிக்கையாளராக பணியாற்றி காஞ்சி மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை செய்து வந்தவர். மகா பெரியவரின் காலத்திற்கு பிறகு, குடும்ப சூழல் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தார். மகா பெரியவாவின் தீவிர பக்தரான இவருக்கு அடிக்கடி காஞ்சிபுரம் சென்று தரிசிக்க இயலவில்லையே என்ற மனக்குறை மட்டும் தீரவில்லை. எனவே, மதுரையில் அனுஷத்தின் அனுகிரகம் என்ற அமைப்பை தொடங்கி மகா பெரியவரின் பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், மதுரையிலேயே பொது இடத்தில் அவரது படங்களை வைத்து பூஜிப்பதை வழக்கமாக செய்து வந்தார். பெரியவா குறித்த சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்து வந்தார். இவ்வாறு, பூஜைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன. இதில் கலந்து கொண்ட பல பக்தர்களும் மதுரையில் பெரி யவருக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வந்தனர். அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்கள் தான் காஞ்சி பெரியவரின் அனுக்கிரகம்.

அது பற்றிப் பேசிய நெல்லை பாலு, "2012 ஆம் ஆண்டில், மகா பெரியவரின் வருடாந்திர ஜெயந்தி விழாவிற்கு சுமார் 2 வாரங்களுக்கு முன்பாக, கனவில் மகாபெரியவரின் விக்ரகம் ஒன்று தொடர்ச்சியாக வந்தது. அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காஞ்சி மடத்திற்கு சென்று விட்டேன். ஜெயேந்திரரிடம் கனவைப் பற்றியும் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியபடி ஒரு சிலையை பக்தர்கள் இதற்கு முன்பாக மடத்திற்கு கொடுத்துள்ளதாகவும் அப்போது அவர் தெரிவித்தார். பின்னர், மகாபெரியவரின் அதிஷ்டானத்தில் வழிபட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அப்போது, மடத்திற்கு வந்திருந்த சுமார் ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் என்னருகே வந்து, 'சிலை விஷயமாத்தானே புது பெரியவாவிடம் பேசுனீங்க!' எனக் கேட்க, ஒரு கணம் அதிர்ந்தே போய் விட்டடேன். நான் உள்ளே பேசியது வெளியில் இருந்த சிறுவனுக்கு எப்படித் தெரியும்? என வியப்பு எனக்கு! அதற்குமேல் பேசாத அந்தச் சிறுவன், ஒரு தொலைபேசி எண்ணை மட்டும் கொடுத்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து நடையைக் கட்டி விட்டான். அங்கு அந்தச் சிறுவனை தவிர வேறு யாரும் இல்லை. ஒருவேளை பெற்றோர்களுடன் வந்திருந்தாலும் கூட, அப்படி யாரும் அங்கு இருந்ததாகவும் தெரியவில்லை.

குழப்பத்தோடு, சிறுவன் கொடுத்த எண்ணை தொடர்பு கொள்ள, எதிர்முனையில் பேசியவர் கும்பகோணத்தில் இருந்த ஒரு சிற்பி. 'இது பெரியவாவின் அனுக்கிரகம்!' என்று அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். கனவில் கண்டபடி சிலை வடிக்க வேண்டும் என்று ஸ்தபதியிடம் கேட்க, அவ்வாறு சிலை வடிக்க தாமதம் ஆகும் என்று சொன்ன சிற்பி, ஏற்கனவே காஞ்சிப் பெரியவரின் ஒரு சிலை தயாராக இருப்பதாகச் சொல்லி, சிலையையும் மதுரைக்கு அனுப்பி விட்டார்" என்றார் வியப்பு குறையாமல்.

அதன்பின்னர், பக்தர்களின் பங்களிப்புடன் சிலையை பிரதிஷ்டை செய்து, 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்' என்னும் பெயரில் வழிபாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரையில் குடி கொண்டு, பக்தர்களுக்குத் தன் அருளாசியை வழங்கி வருகிறார் மகா பெரியவா. காஞ்சிப்பெரியவர் தனது கடைசி கால கட்டத்தில் இருந்த தோற்றத்தில் உள்ளது இங்குள்ள சிலை. உடல் மெலிந்து, நெஞ்சின் விலா எலும்புகள் புடைப்பாக தெரியும்படி தத்ரூபமாக இருக்கிறது. காஞ்சிபுரம் மடத்தில் ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், தங்கச் சப்பரத்தில் அவரது சிலை உலா வரும். கிட்டத்தட்ட அந்தச் சிலையை ஒத்த அளவிலேயே இங்குள்ள சிலையும் அமைந்திருப்பது சிறப்பு.

மதுரையில் மகாபெரியாவா ஆசியுடன் தினந்தோறும் உணவு வழங்கும் அட்சய பாத்திரம் மதுரை அனுஷத்தின் அனுகிரகம் ஸ்தாபகர் நெல்லை பாலு மதுரையில் கொரோனா காலத்தில் இருந்து ரோட்டோரம் உள்ள ஆதரவற்றோர் முதியோர் மற்றும் அரசுமருத்துவ மனையில் உள்ள நோயாளிகள் ஆகியோர்க்கு தினந்தோறும் மதிய உணவை நேரில் சென்று வழங்கிவருகிறார்.

மகா பெரியவா ஆசியுடன் மதுரையின் அட்சய பாத்திரம் என்ற டிரஸ்டை தொடங்கி தற்போது வரை 900 நாட்களாக உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த சேவையை முன்னாள் அமைச்சர்கள் மாவட்ட ஆட்சியர், ஆன்மிக பெரியோர்கள் பாராட்டி வருகின்றனர்.

மதுரை மகா பெரியவா ஆலய தொடர்புக்கு 9442630815

எங்கே இருக்கிறது? மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள, எஸ்.எஸ்.காலனி எண் 13 பொன்மேனி நாராயணன் ரோட்டில் அமைந்துள்ளது. அரசரடி அல்லது காளவாசல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

திறப்பு நேரம் காலை 8 10 மணி, மாலை 5 இரவு 8 மணி, தொடர்புக்கு: 94426 30815



# வீட்டு வாசலில் சாமி இருந்தால் நல்லது

ஸ்வஸ்திக், ஸ்ரீ சக்கரம், ஓம் மற்றும் திரி சூலம் சின்னங்களை வாசல் கதவிலோ அல்லது வாசலின் உள்ளே நேர் எதிரேயோ ஒட்டி வைப் பது பாதுகாப்பிற்கும், அதிர்ஷ்டத்திற்கும் உதவும். வெளியே செல்லும்போது சட்டைப் பையிலும் வைத்துக் கொள்ளலாம். வாசலுக்கு நேர் எதிரே வாசலைப் பார்த்து சிரிக்கும் புத்தரை வைப்பது வளமை, வெற்றி, தனலாபம் ஆகியவை அளிக்க வல்லது.

பூஜை செய்யும் நேரத்தில் பெண்கள் குங்குமம் வைத்துக் கொள்ளவேண்டும் ஸ்டிக்கர் பொட்டு கூடாது. உறவினர்களை வெளியூர் செல்ல வழியனுப்பிய பிறகு பூஜை, முதலியவைகளை செய்யக் கூடாது.



# சூலத்தில் எலுமிச்சை குத்தப்படுவதன் காரணம்?



சூலத்தில் எலுமிச்சை குத்தப்படுவதற்கு காரணம் எலுமிச்சை தேவ கனி என்பதால் ஆகும்.

முக்கனிகளான மாம்பழத்தில் வண்டு குற்றம் உண்டு. பலாவில் வியர்வை குற்றம் உண்டு. வாழையில் புள்ளி குற்றம் உண்டு.

ஆனால் எலுமிச்சையில் மட்டும் இவ்வித குற்றங்கள் இல்லை. மனிதனுடைய எண்ணங்களை ஈர்க்கும் சக்தி மற்ற கனிகளைக் காட்டிலும் எலுமிச்சைக்கு அதிகம் உண்டு. அதனால்தான் சூலாயுதத்தில் எலுமிச்சை குத்தப்படுகிறது.



பகவானின் மந்திரத்தை சொல்லி பிரார்த்திக்க தெரிந்தவர் களுக்கு எப்போதும் எல்லாமே வெற்றிதான். காலையில் விழித்தவுடன் நாராயண னையும் இரவு தூங்கு முன் சிவபெருமானையும் நினைக்க வேண்டும்.



அன்னம் முதலியவற்றை எவர்சில்வர் பாத்திரங்களில் நேரடியாக வைத்து தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யக்கூடாது. பாத்திரத்தில் இலை வைத்து அதில் உணவை வைத்து நிவேதனம் செய்யலாம்.






# பெருமாளின் ஏழு மலையும் அதன் சிறப்பும்

**1. வேங்கட மலை:**

'வேம்' என்றால் பாவம், 'கட' என்றால் 'நாசமடைதல்'. பாவங்களைப் போக்கும் மலை என்பதால் இதற்கு 'வேங்கட மலை' என்று பெயர். இம்மலையில் வெங்கடாசலபதியாக (ஸ்ரீநிவாஸன்) மகாவிஷ்ணு காட்சி தருகிறார்.

**2. சேஷ மலை:**

பெருமாளின் அவதாரத்திற்காக ஆதிசேஷன் மலையாக வந்தார். இது ஆதிசேஷன் பெயரால் 'சேஷமலை' என்று அழைக்கப்படுகிறது.

**3. வேதமலை:**

வேதங்கள் இங்கு மலை வடிவில் தங்கி எம்பெருமானை பூஜித்தன. எனவே இது 'வேத மலை' எனப்பட்டது.

**4. கருட மலை:**

இங்கு சுவாமியை வணங்க வந்த கருடாழ்வார் வைகுண்டத்திலிருந்து ஏழுமலையை எடுத்து வந்தார். அத னால் இது 'கருட மலை' எனப் பெயர் பெற்றது.

**5. விருஷப மலை:**

விருஷபன் என்ற அசுரன், இங்கு சுவாமியை வணங்கி மோட்சம் பெற்றான். அவனது பெயரில் இது 'விருஷப மலை' எனப் பெயர் பெற்றது.

**6. அஞ்சன மலை:**

ஆஞ்சநேயரின் தாய் அஞ்சனை. தனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஆதிவராகரை வேண்டி தவமிருந்தாள். அதன் பயனாக ஆஞ்சநேயரைப் பெற்றாள். இவளது பெயரில் ஏற்பட்ட மலை 'அஞ்சன மலை' எனப்படுகிறது.

**7. ஆனந்த மலை:**

ஆதிசேஷன், வாயு பகவானுக்கிடையே போட்டி ஏற்பட்ட போது, மகாவிஷ்ணு நடுவராக இருந்தார். இருவரும் பலத்தில் சமமானவர்கள் என்று தீர்ப்பளித்தார். இதனால் வாயுவும் ஆதிசேஷனும் ஆனந்தம் அடைந்தனர். இதன் காரணமாக இது 'ஆனந்த மலை' என்று பெயர் பெற்றது.


அனைவருக்கும் ஆயுதபூஜை விஜயதசமி திருநாள் நல்வாழ்த்துக்கள்

வருடம் நம் பண்டிகை திருநாளில் உயர்தரமான

சீசோர்

மரச்செக்கு எண்ணெய்கள் பயன்படுத்துங்கள்




நாட்டு செக்கு நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் கிடைக்கும்.

எள் மற்றும் நிலக்கடலைக்கு ஆயில் மாற்றிதரப்படும்

லெட்சுமி ஆயில் பிளாண்ட்

3/224/2 மதுரை-ராமேஸ்வரம் சாலை

மஞ்சூர் - 623527

செல்: 96260 80353 8870358570

# இறந்த மணமகனை உயிருடன் மீட்ட வாழைமர பாலசுப்ரமணியன்



எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இறைவனே தேடி வந்து குடியிருக்கும் கிராமம் தான் விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டை அருகே உள்ள துலுக்கன்குறிச்சி என்ற சிறிய கிராமம். இக்கோவில் சிவகாசியிலிருந்து சங்கரன்கோவில், கழுகுமலை செல்லும் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. சிவகாசியில் இருந்து 17 கிலோ மீட்டர் தூரமாகும்.

பெயர்க்காரணம்...

150 ஆண்டுகளுக்கு முன்னர் முருகப்பெரு மான் மீது அன்பும் ஆழ்ந்த பக்தியும் கொண் டிருந்த வேலாயுதம் என்ற பக்தருக்கு காட்சி கொடுத்து தான் வாழைமரத்தில் குடியிருப்ப தாக கூறி அருள்பாலிப்பதால் வாழைமர பால சுப்பிரமணிய சுவாமி எனஅழைக்கப்படுகிறது.

துலுக்கன்குறிச்சி கிராமத்தில் வாழ்ந்த தேரி யப்பர் வீரம்மாள் தம்பதிக்கு மகனாக பிறந்தவர் வேலாயுதம்.

இவர் தினமும் அதிகாலை வெம்பக் கோட்டை வைப்பாற்றில் குளித்துவிட்டு வனமூர்த்தி லிங்காபுரம் விநாயகர் கோவிலில் உள்ள முரு கனை தரிசித்துவிட்டு அன்றாட பணிகளை செய்வதையே வழக்கமாக கொண் டிருப்பார்.

வைத்திய முறை தெரிந்து வைத்திருந்தார். அங் குள்ள மக்களுக்கு வைத்தியம் செய்வதற்கு பணம் வாங்குவதில்லை. தர்ம சிந்தனையுடன் வைத்தியத்தின் மூலம் நோய் நீக்கியதால் மக்கள் பக்தியை கண்டு சித்தர் என்று போற்றினார்கள்.

வேலாயுதம் வழக்கம்போல் ஒருநாள்அதிகாலை எழுந்து வெம்பக்கோட்டை வைப்பாற்றில் குளித்து விட்டு முருகனை தரிசனம் செய்ய செல்லும்போது ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் ஆற்றை கடக்க முடியாமல் போனது.

அதனால் முருகனை தரிசிக்க முடியாமல் தன் இல்லம் வந்து விட்டார். அன்று முழுவதும் வேதனையுடன் இருந்தார்.

இரவு முருகனின் திருநாமத்தை சொல்லிய வாறு கண் அயர்ந்த போது கந்தன் கனவில் வந்து வேலாயுதா என்னை காண எங்கும் செல்ல வேண்டாம். நானே உன்னை தேடி வந்து விட்டேன். நீ ஆசையாக பராமரித்து வரும் வாழைத்தோட்டத்தில் ஒரே ஒரு குலை தள்ளிய வாழை மரத்தில் மட்டும்தான் இருப்ப தாக சொல்லி மறைந்தார். மறுநாள் காலை வேளையிலும் குளித்து விட்டு தன்னுடைய தோட்டத்தை நோக்கி ஓடிச் சென்றார் மெய் மறந்து செய்வதறியாது திகைத்து நின்றார். காரணம் கனவில் முருகன் கூறிய படி குலை யுடன் வாழை மரம் இருந்து அதிசயம்கண்டு மனமுருகி வேண்டி நின்றார். இச் செய்தி பரவிய தால் வாழைமரத்தை பக்தர்கள் வழிபட்டனர்.

ஒருமுறை செவல்பட்டி ஜமீன் அரண்மனையில் பிரதான கணக்கு பிள்ளையின் ஒரே மக னுக்கு திருமண விழாவுக்காக அந்த வாழை மரத்தை வெட்டி சென்றனர். ஆனால் வேலாயு தம் வாழை மரத்தை வெட்ட அனுமதிக்க மறுத்து விட்டார். இதனால் மணமகன் தானே நேரில் சென்று வாழை மரத்தை வெட்டிக் கொண்டு வருவதாக கூறி தோட்டத்துக்கு சென்றார்.

அவரிடமும் வேலாயுதம் தான் வாழைமரம் தர முடியாது என்று உறுதியாக கூறினார். ஆனால் வேலாயுதம் சொல்வதைக் கேட்காமல் தன் கையில் இருந்த அரிவாளால் மரத்தை ஓங்கி வெட்டினான்.




கோவிலுக்குள் நுழையும் தோரணவாயில்



கோவிலுள்ள பஞ்ச லிங்க சன்னதி



முருகனின் சிறப்புகளை கூறும்
சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள்

அடுத்த கணம் வெட்டிய வாழையிலிருந்து ரத்தம் வெளி யேறி நாகமாக மாறி மணமகனின் காலை தீண்டியது. சிறிது நேரத்தில் மணமகன் இறந்துவிட்டான். கணக்குப்பிள்ளை அழுது புரண்டார். தன் மகனை காப்பாற்றுமாறு வேலாயு தம் காலில் விழுந்து கெஞ்சினார்.

என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று முருகனிடம் கேளுங்கள் என கூறினார். நீங்கள் நினைத் தால் காப்பற்றலாம் என வேண்டினார்கள். வேலாயுதம் தன் கையிலிருந்த பிரம்பால் இறந்த மணமகன் மீது முருகா.. முருகா... முருகா.. என 3 முறை திருநாமத்தை கூறி விட்டார். உடனே ஒரு அதிசயம் நடந்தது,

இறந்த மணமகன் உயிர் பெற்றான். இதை கண்ட ஜமீன் தார் இந்த இடத்தில் வாழை மர பாலசுப்ரமணி யனுக்கு ஒரு கட்டிடம் அமைத்து கொடுத்தார். அதன்படி கோவில் அமைக்கப்பட்டது. கோவி லுக்கு வரும் பக்தர்களுக்கு வேலாயுதம் ஆசி வழங்கினார். அருள்வாக்கு கூறி அனை வருக்கும் நன்மைகள் செய்து வந்தார். இவரது காலத்திற்கு பின்பு அவருடைய மகன் தேரியப்பர் கோவில் திருப்பணியை செய்து வந்தார். ஒருமுறை ஏற்பட்ட திடீர் புயல் மழை நாள் வெள்ளத்தால் கோவில் இடிந்து போனது. இடிந்துபோன கோவிலை புதுப்பிக்கும் வண்ணம் சிறிய அளவில் கோவில் கட்டப்பட்டது.

தேரியப்பர் வாரிசுதாரர்கள் பிழைப்புக்காக வெளியூர் சென்று விட கோவில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து ஆண்டுக்கு ஒரு முறை வைகாசி விசாகம் தோறும் பால்குடம் எடுத்து வழிபட்டு வருகின்றனர். வாயு மூளையில் உற்சவர் சிலை அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் புன்னகை தவழும் முகத்துடன் நின்ற




நிலையில் இடது கையை தொடையில் வைத்தபடி வலது கையில் அபய முத்திரை பின்னர் வாழைமரம் இருக்குமாறு அற்புத வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இது திருமண தோஷம், புத்திர தோஷம் நோய்களை தீர்க்கும் நிவர்த்தி தலமாக அமைந்துள்ளது. திருமண தடை நீங்கவும் குழந்தை பாக்கியம் பெறவும் நோய்நொடி என்று பெருவாழ்வு வாழவும் சகல சவுபாக்கியம் உடன் வாழையடி வாழையாய் வாழ்வாங்கு வாழ்ந்த ஸ்ரீ வாழைமர பாலசுப்ரமணிய சுவாமி ஆலயம் வந்து வணங்கி வளமோடு வாழ்வோம்.


2023 நவம்பர் மாதம் 18.11.2023, 19.11.2023 நாட்களில் தாரகஹார குமாரஷஷ்டி (சூரசம்ஹார) திருவிழா நடைபெறவுள்ளது.


# மதுரையில் சித்தர்கள் தேடிவந்த திருகூடல்மலை











மதுரையில் ககபுஜண்டர் முதல் கட்டிக்குளம் மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் அவரைதேடி வடக்கில் இருந்து வந்த சோமப்பா சுவாமி சித்தர் என ஏராளமான சித்தர்கள் முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் கோவில் மிக அருகே உள்ளது.

திருகூடல்மலை, இம்மலை புஜண்டர் மலை எனவும் அழைக்கப்படுகிறது. அடிவாரத்தில் உள்ள ராமலிங்க விலாசத்தில் கட்டிக்குளம் மகாசித்தர் சூட்டுகோல் ஸ்ரீ மாயாண்டி சுவாமி, மலைநடுவே ஸ்ரீசோமப்பா சுவாமி மலை உச்சியில் சித்தர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட தண்டபாணி சுவாமி, அதன் அருகில் குகைகோவிலில் ஸ்ரீ நவநீதபெருமாள் ஸ்ரீ வைகுண்டபெருமாள் சன்னதிகள் உள்ளது.

மற்றும் மலை பாதையில் மிக பெரிய ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. திருகூடல்மலையில் இருந்து சித்தர்கள் ஒரேநேரத்தில் அன்னை மீனாட்சி அம்மன், யானைமலை யோகநரசிம்மர், அழகர் மலை அழகர் ஆகியோரை ஒரே நேரத்தில் தியாணநிலையில் தரிசித்து உள்ளனர். என பக்தர்கள் கூறிவருகின்றனர்.

இப்போதும் இம்மலை உச்சியில் இருந்து மீனாட்சி அம்மன் கோவில் கோபுரங்கள் மற்றும் யானைமலை, அழகர் மலையை காணலாம். இக்கோவிலில் சித்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீநவநீதபெருமாள் ஆண்டு தோறும் ஆடி பவுர்ணமி தினத்தில் திருகூடல்மலையில் இருந்து புறப்பட்டு மதுரை நகரைசுற்றி பல ஊர்களில் சென்று மானாமதுரை வரை பக்த்தர்களுக்கு எழுந்தருளும் பிரம்மோற்சவ விழா நடைபெறுகிறது.

மேலும், ஆடிமாதம் சூட்டுகோல் ராமலிங்கம் ஸ்வாமி, சூட்டுகோல் மாயண்டி ஸ்வாமி, சோமப்பா ஸ்வாமி குருபூஜைவிழா சங்கடஹர சதுர்த்தி பூஜை தைபூசம், பிரதோஷ வழிபாடு, ஐப்பசி அன்னாபிஷேகம், கார்த்திகை சோமவார விழா, வைகுண்ட ஏகாதசி போன்ற விழா காலங்களில் சிறப்பு யாகம் நடைபெறுகிறது.

தினமும் மதியம் சுவைமிகு அன்னதானம் நடைபெறுகிறது. மதுரை மட்டும்மின்றி தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமிழகத்தில் பல ஊர்களில் இருந்து வந்து சித்தர்கள் தேடிவந்த திருகூடல்மலை ஏறிவந்து சித்தர்கள் அருள்ஆசியும், சித்தர்கள் தவமிருநத குகைகளில் தியானம் செய்து வழிபட்டு செல்கின்றனர்.

திருகூடல்மலை பற்றிய ஆலய தகவல் பற்றி அறிய 9842124841.


ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை

மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்

பீனாஸ் பத்திர எழுத்தகம்



பத்திர எழுத்தர்

Prop.N.P.வேல்முருகன் B.Com

State Document Writer

செல்: 99526 39497

95851 88741

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை தாலுகா
துலக்கன் குறிச்சி கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்துவரும்

# அருள்மிகு ஸ்ரீ வாழைமர பாலசுப்பிரமண்ய சுவாமி ஆலயம்

## தாரகஹார குமாரஷஷ்டி (சூரசம்ஹார) திருவிழா



**கார்த்திகை 2ந் தேதி**
**18.11.2023 சனிக்கிழமை**

காலை 8 மணிக்கு: ருத்ர ஏகாதசி, ஜெபம்,
ருத்ர ஹோமம், சிறப்பு தீபாரதனை
மாலை 5 மணிக்கு: கமுகாபூரன், சிங்கசூரன்,
தாராகசூரன் ஷஷ்டிவிழா
வெகு சிறப்பாக நடைபெறும்

சூரசம்ஹாரம் முடிந்தவுடன்
சுவாமிக்கு பால்,
பன்னீர் அபிஷேகம் நடைபெறும்.

**கார்த்திகை 3ந் தேதி**
**19.11.2023 ஞாயிற்றுக்கிழமை**

காலை சிறப்பு ஹோமம்,
திருக்கல்யாணம், புஷ்பாஞ்சலி

---

பக்த கோடிகள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு அருள்மிகு
ஸ்ரீ வாழைமர பாலசுப்பிரமணிய சுவாமி அருள் பெற அன்புடன் அழைக்கிறோம்

**தொடர்புக்கு: 9840545860**

aanmeegamalar.com



ரோட்டோரத்தில் உள்ள வறியவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தினமும் மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு

# நீங்களும் உதவலாமே!

நன்கொடைகளுக்கு வருமான 80G வரிவிலக்கு உண்டு

# மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்

இயலாதவர்களுக்கு உணவு வழங்குவது மூதாதையர்களுக்கு திதி கொடுத்த புண்ணியம் கிடைக்கும். Regd. No. 4-50/2021

மதுரையில் வீதியோரத்தில் உணவுக்காக தவித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கு "மதுரையின் அட்சயப் பாத்திரம்" என்ற அமைப்பை தொடங்கி கடந்த 900 நாட்களுக்கு மேலாக தினந்தோறும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம். தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் போன்ற நாட்கள், பிற நாட்களிலும் இந்த புனிதப் பணிக்கு உதவிட அன்புடன் வேண்டுகிறோம். வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் – வள்ளலார்

**ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூ.40 வீதம் 300 பேருக்கு ரூ.12000 ஆகிறது**

| | | |
|---|---|---|
| 25 | நபர்களுக்கு | ரூ.1,000 |
| 50 | நபர்களுக்கு | ரூ.2,000 |
| 100 | நபர்களுக்கு | ரூ.4,000 |
| 200 | நபர்களுக்கு | ரூ.8,000 |
| 250 | நபர்களுக்கு | ரூ.10,000 |
| 300 | நபர்களுக்கு | ரூ.12,000 |

இந்த புனிதமான பணிக்கு உதவ

**Maduraiyin Atchaya Paathiram Trust**

Cheque or DDமூலம் உங்களது முகவரி மற்றும் PAN நம்பருடன்அடியிற் கண்ட முகவரிக்கு அனுப்பிட வேண்டுகிறோம்

**9442630815 (G-Pay)**

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை–16
**9442630815 (G-Pay)**

**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
A/C No:110031396472
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006



## தரிசிக்க வாருங்கள்!

# காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவா கோவில் (க்ருஹம்)

13, பொன்மேனி நாராயணன் ரோடு,
எஸ்.எஸ்.காலனி, மதுரை.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவார தினத்தன்று சிறப்பு புஷ்பாஞ்சலி நடைபெறும். வியாழன் அன்று நடைபெறும் குருவார நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் ஸ்படிக மாலை பிரசாதமாக வழங்கப்படும். அனுஷ நட்சத்திர தினத்தன்று ஸ்ரீ மஹா பெரியவா விக்ரஹம் மற்றும் வெள்ளி பாதுகைக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.

அனுஷ வைபவத்திற்கு தங்களின் அருட்கொடையினை வழங்கிட அன்பு வேண்டுகோள்



*ஸ்ரீ மஹா பெரியவா அருட்பணியில்...*
**Rtn.நெல்லை பாலு,**
நிறுவனர், அனுஷத்தின் அனுகிரஹம்
செல் : **9442630815(G-Pay)**

aanmeegamalar.com